# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



## சீமாட்டி லீலாவதி இராமநாதன்
## நினைவுப் பேருரை - 2016

**வட இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவினுள் மனித நேய விழுமியப் பேணலும் கல்வியின் பங்களிப்பும்**

பேருரை வழங்குபவர் :


கலாநிதி திருமதி.அனுஷ்யா சத்தியசீலன்
தலைவர், கல்வியியற்றுறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


22.01.2016

# சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை - 2016

## வட இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவினுள் மனித நேய விழுமியப் பேணலும் கல்வியின் பங்களிப்பும்

பேருரை வழங்குபவர்

கலாநிதி திருமதி அனுஷ்யா சத்தியசீலன்

தலைவர், கல்வியியற்றுறை,
கலைப்பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**22.01.2016**



லீலாவதி இராமநாதன் சீமாட்டி

**LADY LILAVATHI RAMANATHAN**

**சீமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப் பேருரை**

ஆண்டுதோறும் சீமாட்டி லீலாவ்தி இராமநாதன் நினைவுப் பேருரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் வருடாந்த பட்டமளிப்பு விழாவின் பின்னர் நடத்தப்பட்டு வருகின்றது. இது சேர்.பொன். இராமநாதன் மற்றும் சீமாட்டி லீலாவதி இராமநாதன் அவர்கள் இருவரையும் நினைவுகூரும் வகையிலும், அவர்களின் அளப்பரிய சேவைகளை எடுத்துக்காட்டும் வகையிலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அத்திவாரமாக பரமேஸ்வராக்கல்லூரி அமைந்தமையை ஞாபகப்படுத்தும் வகையிலும் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த வருடம் இந்த நினைவுப் பேருரையினை கலாநிதி.திருமதி.அனுஷ்யா சத்தியசீலன் அவர்கள் 'வடஇலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவினுள் மனிதநேய விழுமியப் பேணலும் கல்வியின் பங்களிப்பும்' எனும் தலைப்பில் வழங்குகின்றார். இன்றைய சூழலில் வட இலங்கை மக்களின் பெறுமானங்கள் பேணிப் பாதுகாக்கப்படுவது மிகவும் அவசியமானதொன்றாகும். அந்த வகையில் இந்த தலைப்பினை கலாநிதி. திருமதி.அனுஷ்யா சத்தியசீலன் அவர்கள் தெரிவுசெய்து அதனை ஆவணப்படுத்துவது பொருத்தமானதாகும்.

இந்த நினைவுப்பேருரையினை ஆற்ற ஒப்புதல் தந்து அதனை ஆற்றவிருக்கும் கலாநிதி. திருமதி.அனுஷ்யா சத்தியசீலன் அவர்களுக்கு பல்கலைக்கழகத்தின் சார்பில் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேராசிரியர் வசந்தி அரசரெத்தினம்<br>
துணைவேந்தர்<br>
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

மதிப்புக்குரிய வேந்தர் அவர்களே! மதிப்பிற்கும் அன்பிற்குமுரிய துணைவேந்தர், சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரெத்தினம் அவர்களே! கலைப்பீடாதிபதி சிரேஷ்ட பேராசிரியர் நா.ஞானகுமாரன் அவர்களே! பீடாதிபதிகளே, பல்கலைக்கழக பதிவாளர் அவர்களே! பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்களே, துறைத்தலைவர்களே, விரிவுரையாளர்களே, கல்விநிர்வாகிகளே, பல்கலைக்கழக நிர்வாகிகளே, ஆசிரியர்களே, மாணவர்களே, பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களே, ஆர்வலர்களே, இராமநாதன் கல்லூரி அதிபர் அவர்களே, சைவமங்கையர்கழக உறுப்பினர்களே அனைவருக்கும் வணக்கம்.

ஒவ்வொரு வருடமும் இடம் பெறும் பட்டமளிப்பு விழாவினைத் தொடர்ந்து நடைபெறும் சீமாட்டி லீலாவதி இராமநாதனுடைய நினைவுப்பேருரையை ஆற்றுவதற்கு எனக்குக் கிடைத்த வாய்ப்பையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இப்பேருரையை ஆற்றுவதற்கு எனக்கு ஊக்கமளித்த கலைப்பீடாதிபதி பேராசிரியர் நா. ஞானகுமாரன் அவர்களுக்கும், வாய்ப்பளித்த உபவேந்தர் வசந்தி அரசரெத்தினம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பேருரையை ஆற்றுவதற்கு முன்னராக பெருமதிப்புக்குரிய சீமாட்டி லீலாவதி இராமநாதன் அவர்களைப் பற்றிய சில எண்ணங்களை உங்களுடன் பகிரலாமென நினைக்கின்றேன். இலங்கையின் முதுபெரும் கல்விமான்களுள் ஒருவரும், தமிழ், சிங்கள மக்களால் தேசியத் தலைவராக மதித்துப் போற்றப்பட்டவரும், அதே சமயம் சைவத்தமிழ்க் காப்பாளரும், அரசியல், சமூக சேவையாளரும், சிந்தனையாளரும், வள்ளலாகவும் விளங்கிய சேர்.பொன்.இராமநாதனின் வாழ்க்கை நிறைவுக்குத் தோள்கொடுத்த மனைவியாக வாழ்ந்தவர்தான் சீமாட்டி லீலாவதி இராமநாதன் அவர்கள்.

அவுஸ்திரேலியாவில் பிறந்து வளர்ந்தாலும் இந்துசமயத்தினாலும் அதன்கோட்பாடுகளினாலும் ஈர்க்கப்பட்டவராக இலங்கை வந்த அம்மையார், திரு.இராமநாதனின் ஆளுமையால் கவரப்பட்டு அவரது இலட்சிய மனைவியானார். அன்றிலிருந்து தான் இறக்கும் வரையும் (1953) இராமநாதனின் இலட்சிய மனைவியாக, விசுவாசியாக, சைவத் தமிழ் வளர்ச்சிக்கு தோள்கொடுத்த தொண்டராக, பண்பாட்டின் அடையாளமாக, விழுமியப்பேணல்களின் வழிகாட்டியாக விளங்கியவர் சீமாட்டி லீலாவதி இராமநாதன் என்று கூறினால் மிகையாகாது. அதன் எச்சங்களாக இன்றுவரை கம்பீரமாக நிலைத்திருப்பவையே யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் அத்திவாரமாக இருந்த பரமேஸ்வராக் கல்லூரியும், இராமநாதன் கல்லூரியும், கொழும்பு பொன்னம்பலவாணேசர் ஆலயமும், சைவமங்கையர் கழகமும் ஆகும்.

அவருடைய பெருமைக்கு மேலும் வலுச்சேர்ப்பவையாக அவரால் எழுதப்பட்ட பல நூல்கள் அமைந்தன. அம்மையாரின் சமூக, சமய, கலாசார பணிகளின் மேன்மை கண்டு இலங்கைப் பல்கலைக்கழகம் அவருக்கு சட்டக் கலாநிதி கௌரவ பட்டத்தைக் வழங்கி (1942) கௌரவித்தது.

இனம், மொழி, மதம் என்ற அம்சங்களால் வேறுபட்ட ஹரிசன்அம்மையார் சீமாட்டி லீலாவதி இராமநாதன் ஆகி தமிழ் இனம், தமிழ் மொழி, சைவம் இவற்றின் பண்பாட்டு கலாசார பெறுமானங்களை தக்க வைத்து மனிதநேய விழுமியங்களோடு ஒன்றுபட்டு யாழ்ப்பாணத்தை தன் சொந்த நிலமாகக் கருதி வாழ்ந்தார். அத்தகைய பெருமைமிகு பெண்மணியின் நினைவுப் பேருரையை ஆற்றுவதற்கு கிடைத்த வாய்ப்பையிட்டு பெருமை கொள்கின்றேன்.

# வடஇலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவினுள் மனிதநேய விழுமியப்பேணலும் கல்வியின் பங்களிப்பும்.

கலாநிதி திருமதி அனுஷ்யா சத்தியசீலன்
தலைவர், கல்வியியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**முன்னுரை**

அறிவுவெடிப்பு (Knowledge Explosion), இலத்திரனியல் மயமாக்கம், தொழில்நுட்ப அறிவு வளர்ச்சி, உலகமயமாக்கம், தாராளமயமாக்கம் என்பன இன்று உலகை 'ஒரு கிராமம்' என்ற நிலைப்பாட்டிற்குள் கொண்டு வந்துள்ளன. அந்த அளவிற்கு கல்வி வளர்ச்சி கண்டுள்ளது. கல்வியூடாக மனிதன் அறிவு ரீதியாக, ஆராய்ச்சி ரீதியாக அபரிமித வளர்ச்சி கண்டு வருகின்றான். வேற்றுக் கிரகத்தினுள் பிரவேசித்துக் குடியேற நினைக்குமளவிற்கு வளர்ச்சி காணப்பட்டுள்ளது. ஆனால் அந்தளவிற்கு மனித மனங்கள் வளர்க்கப்பட்டுள்ளனவா? வளமாக்கப்பட்டுள்ளனவா? வக்கிரமற்ற அமைதியான சாந்தமான மனிதத்தினை நேசிக்கின்ற மனப்பாங்குகள் தோற்றுவிக்கப்பட்டுள்ளனவா? அதீத அறிவு வளர்ச்சிக்கேற்ப மனித மனங்கள் நேர்த்தியாக, பண்பட்டவையாக விரிவு கண்டுள்ளனவா? என்றால் இல்லை என்றுதான் சொல்லவேண்டியுள்ளது. வேகமாக வளர்ந்து வரும் அறிவுப் பெருக்கம், அறிவியல் ஆராய்ச்சிகளினூடு அபரிமித சாதனைகள் படைக்கப்பட்டு வரும் அதே வேளை மனித வாழ்வியலில் பிரச்சினைகள், அடக்குமுறைகள், போட்டிகள், போர்கள், மிலேச்சத்தனமான செயற்பாடுகள், சுயநலப்போக்குகள், ஆரோக்கியமற்ற நடத்தைகள் என்பனவே மிகுந்து காணப்படுகின்றன. அந்த அளவிற்கு மனித மனங்கள் மாசுபட்டுக் கிடக்கின்றன. மாறாக மகிழ்ச்சியான மனங்கள், நிம்மதி, புரிந்துணர்வு, சகிப்புத் தன்மை, விட்டுக் கொடுப்பு, பரிசீலிக்கும் மனப்பாங்கு, அச்சமின்மை, கூட்டுறவு, சுதந்திரம், ஒருவரை ஒருவர் நேசித்தல், ஒருவருக்கொருவர் மதிப்பளித்தல், இயற்கையை நேசித்தல்

போன்ற நல்ல பல மனிதநேய விழுமியங்கள் மெல்ல மெல்ல மறைந்து செல்வதனை அவதானிக்க முடிகின்றது. இலங்கையும் இப்போக்குக்கு விதிவிலக்கானதல்ல. கல்வியினூடாக அபரிமித வளர்ச்சிப்போக்குகள் முழுமையாகக் கிடைக்காது விட்டாலும், இலங்கையின் கல்வி நிலைமைகள் பற்றி குறை சொல்வதற்கில்லை. ஆயினும் எம்மவரிடையே மனிதநேய விழுமியப் பேணல் குறைவடைந்து செல்வதனையும் மறுப்பதற்கில்லை. சிறப்பாக வடஇலங்கை நிலைமைகளை முன்னைய காலங்களுடன் ஒப்பிடுமிடத்து இன்றைய சூழலில் குறிப்பிடத்தக்களவில் மனிதநேய விழுமியப் பேணல் குறைவடைந்து போகின்றமையை ஆய்வுகள் மூலந்தான் வெளிப்படுத்த வேண்டுமென்ற அவசியம் இல்லை. அன்றாடம் நாம் காணும், படிக்கும், கேட்கும், அறிந்து கொள்ளும் செயற்பாடுகள் இவற்றை வழிமொழிகின்றன.

அந்த வகையில் வட இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவினுள் மனிதநேய விழுமியப் பேணலும் கல்வியின் பங்களிப்பும் பற்றி நோக்குவது அவசிய, அவசர தேவையாக இருக்கின்றது. அதனடிப்படையில் பின்வரும் நோக்கங்களின்பாற்பட்டதாக இப் பேருரை இடம்பெறுகின்றது.

- மனிதநேய விழுமியங்கள்- கருத்துக்களும்,. விளக்கங்களும்.
- கல்வி - வரைவிலக்கணங்களும், எதிர்பார்ப்புகளும்.
- மனிதநேய விழுமியங்கள் - முக்கியத்துவமும், அவசியமும்.
- வடஇலங்கையும் யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவும்.
- மனிதநேய விழுமியப் பேணலும் கல்வியின் பங்களிப்பும்.

மனிதநேய விழுமியப் பேணலும் கல்வியின் பங்களிப்பும் என்று பொதுவாகக் குறிப்பிடப்பட்டாலும் பாடசாலைக் கல்விப் பங்களிப்புப் பற்றியே இங்கு கருத்திலெடுத்துக் கொள்ளப்படுகின்றது.

**மனிதநேய விழுமியங்கள் - கருத்துக்களும், விளக்கங்களும்.**

மனிதநேய விழுமியம் தொடர்பாக ஒருசில கல்வியியலாளர்கள், அறிஞர்களுடைய கருத்துக்கள், விளக்கங்கள் முதலில் நோக்கப் படுகின்றன.

- “ஒரு சமூகத்தில் அல்லது அச்சமூகத்தில் பெரும்பான்மையினரால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற நியமங்கள் அல்லது நம்பிக்கைகள்.” (Kane, citied in Gose,*1969*,p.82)
- “மனிதநேய விழுமியங்கள் என்றால் தனிநபர், சமூகம், வாழ்க்கை என்பவற்றைப் போஷிக்கின்ற, வளப்படுத்துகின்ற, அர்த்தமுடைய தாக்குகின்ற பெறுமானம் மிக்க பண்புகளாகும்.” (பாலசூரியா, 1993,ப.83)
- “மதம் சார்ந்த நம்பிக்கைகளுக்கு மேலாகவே பகுத்தறிவுக்கு முக்கியத்துவம் அளித்து மனிதப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பரிசீலிக்கும் ஒரு சிந்தனைப்போக்காகும்” (Oxford Special Dictionary,2000, p.635)
- “மனிதநேயம் என்பது மனிதன் சக மனிதனிடம் பரிவு காட்டுவது மட்டுமன்றி மாறாக ஏனைய உயிர்கள் மற்றும் இயற்கை இவற்றின்பாலும் நேயமும் பரிவும் கொண்டு விளங்குவதாகும்” (மேலது)
- “நேர்மை, நம்பிக்கை, நற்செயல்கள், பொறுப்பேற்றல், பொறுப்புக் கூறல், சகோதரத்துவம், அன்பு, சமாதானம், காருண்யம், சுயஒழுங்கு, இன்சொல், சிநேகபூர்வம் போன்ற பண்புகள் மனிதநேய விழுமியங்களாகும்.”(சமிந்த வணசிங்க, 2003,ப.95)
- “ஒவ்வொருவராலும் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஏற்றுக் கொள்ளப்படும் பெறுமானங்கள், கணிப்புகள், விருப்புகள் போன்றவை மனிதநேய விழுமியங்கள் என ஆரம்பகட்டத்தில் குறிப்பிடப்பட்டாலும் ஒரு நல்ல செயலைச் செய்யும் போது கிடைக்கின்ற அனுபவங்களே மனிதநேய விழுமியத்திற்குரிய விளக்கமாகும்.”(Edgar Brighman, citied in Gose,2005,p.2)

> "மரியாதை செய்தல், சுயகட்டுப்பாடு, தன்னம்பிக்கை, பொறுப்புக்கூறல், ஊக்கப்படுத்தல், இரக்கம், அன்பு, பொறுமை போன்ற பண்புகள் மனிதநேய விழுமியங்களாகும்" (Gose,2005,p.4)

மேலும் மனித வாழ்க்கையில் எது சரி? எது தவறு? என்று தீர்மானிக்கும் நம்பிக்கைகள் மனித நேய விழுமியங்கள் என்று குறிப்பிடப்படலாம் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது.

இவை தவிர மனிதநேய விழுமியங்கள் பின்வருமாறு பட்டியற்படுத்தப்பட்டன:

1. உலகப் பார்வை (Global Outlook)
2. பரிசீலிக்கும் பண்பு (Consideration)
3. கூட்டுறவு மனப்பாங்கு (Co-operation)
4. சுதந்திரம் (Freedom)
5. இயற்கையை நேசித்தல் (Love of Nature)
6. அழகியல் உணர்வு (A Sense of Beauty)
7. அச்சம் தவிர்த்தல் (Fearlessness)
8. ஒருமைப்பாடு (Integration)
9. வேறுபாடு காட்டாத மனப்பாங்கு (Non Divisive Mind)
10. சமச்சீர் உறவு (Symmetrical Relationship )

அதற்கு மேலாக மனிதநேயவிழுமியங்கள் ஐந்து அடிப்படை விழுமியங்களாகவும், அவற்றுடன் தொடர்புபட்ட உபவிழுமியங்களாகவும் வகைப்படுத்தப்பட்டிருந்தமை பற்றியும் நோக்கலாம்.

**அடிப்படைவிழுமியங்களும் உபவிழுமியங்களும்**

1. உண்மை ⟶ சுயபகுப்பாய்வும் ஒன்றிணைப்பும்
2. நேர்மை ⟶ கடமையுணர்வு, நன்றியறிதல், தியாகம், எளிமையான நடத்தை

3. சமாதானம் ⟶ சுய ஒழுக்கம், பொறுமை,பணிவு
4. அன்பு ⟶ அக்கறை காட்டல், கருணை, தாராளமனப்பாங்கு, பங்குகொள்ளல், மன்னிப்பு
5. அகிம்சை ⟶ வாழ்க்கையில் ஈடுபாடு, சமூகநீதி, சேவைமனப்பாங்கு, (Chandrakumar,2013.pp.26-27)

மனிதநேய விழுமியங்கள் தொடர்பான கருத்துக்கள், விளக்கங்கள் மேற்கூறப்பட்டனவாக மனிதன் உலகில் தானும், தான் சார்ந்தவர்களுடனும், பொருத்தப்பாடுடையவனாக வாழ்வதற்கும், தான் சார்ந்த சூழலுடன் சமச்சீர் உறவு பூண்டு வாழ்வதற்கும் உதவக்கூடிய பண்புகளை மனிதநேய விழுமியங்கள் எனச் சுருக்கமாக வரையறுத்துக்கொள்ள முடியும்.

**கல்வி - வரைவிலக்கணங்களும், எதிர்பார்ப்புகளும்.**

அடுத்து கல்விக்கான வரைவிலக்கணங்கள், எதிர்பார்ப்புகள் சிலவற்றினையும் இங்கு நோக்குதல் அவசியம்.

- “கல்வி என்பது ஒரு மனிதனின் அறிவினைப் பெருக்குவதற்கு உதவுவதுடன் தூயஅறநெறியினை வளர்த்துக் கொள்ளவும் உதவவேண்டும். இல்லையெனில் அவ்வறிவுப் பெருக்கம் துன்பப் பெருக்கத்தில் போய்முடியும்.” (Bertrand Russel, citied in Singh,1969,p.102)
- “கல்வி என்பது ஒவ்வொருவனது மனத்தினையும், உணர்வுகளினையும் ஒழுங்கு பெறச் செய்ய உதவுவது” (John.Fisher, citied in Krishnamoorthy,1973,p.48)
- “கல்வி மாணவர்களுக்கு அறிவார்ந்த பயிற்சியளிப்பது சரியே. அது அவசியமானதும் கூட. ஆயினும் அது கல்வியின் ஒரு பகுதி மட்டுமே. மற்றுமொரு பகுதியானது இளம் மனங்களில் மனிதவிழுமியங்களைச் செயற்படுத்துவது அவசியம். இத்தகைய செயற்பாடுகளின்றி அடையப்பெறும் கல்வி வெற்றுக்கல்வியேயாகும்.”(மேலது)

- “மனிதரிடையே நன்னடத்தையை உருவாக்குவதும், மனத்தின் ஆற்றலை உயர்த்துவதும், ஒருவனை தன் சொந்தக்காலில் நிற்கும் திறனை வளர்த்துக்கொள்ளச் செய்தலும் கல்வியின் பாறபட்ட வையாகும்”. (விவேகானந்தர்,மேலது)
- “என் அன்பார்ந்த மகனே உன்கல்வி பற்றிச் சரியான அக்கறை எடுத்துக்கொள்ளப்படவில்லையென சில சமயங்களில் நீ குறைபட்டிருக்கக் கூடும் . வெறும் அறிவு மட்டும் கல்வியாகி விடாது. அதன்பணியும் அதுமட்டுமல்ல, நன்நடத்தையை விருத்தி செய்வதுதான் உண்மையான கல்வி” (காந்திஜி, மேலது)
- “தெள்ளிய அறிவும் நன்நடத்தை கொண்ட பண்பட்ட மக்களையும் உருவாக்குவதே கல்வி” (Martin Luther King,citied in The Hindu *,25.05.1997,p.7)*
- “மனிதநேய விழுமியங்களை வளர்த்தெடுப்பதில் கல்வியின் பங்கு அளப்பரியது. மனிதன் பண்பாட்டுச் சூழலில் வாழ்வதற்கும், சமூகத்தில் படிப்படியாகத் தனது ஆளுமையை வளர்த்தெடுப்பதற்கும் உதவக்கூடிய சாதனமே கல்வி”(Zahir Hussain,citied in The Hindu *,02.03.2001,p.9)*
- “உன்னத மரபுகளையும், அன்பையும், இரக்கத்தையும் ஒருவரிடம் பேணிவளர்க்கவும், முழுமையான அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ உதவுவதும் கல்வியாகும். கல்வி என்பது தேர்வில் வெற்றி பெறுவது மட்டுமல்ல, பட்டம், பதவிகளைப் பெறுவதற்கு உதவுவது மட்டுமல்ல, மாறாக அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழ்வதற்கும், பண்புகளைப் பேணுவதற்கும், இயற்கை அழகை இரசிக்கவும், நேசிக்கவும் உதவுவதாகவும் இருக்க வேண்டும்” (Radhakrishnan, citied in The Hindu *,02.03.2001,p.9)*

கல்வி தொடர்பான வரைவிலக்கணங்களும் எதிர்பார்ப்புகளும் மேற்கூறப்பட்டனவாக அதன் அடிப்படையில் கல்வியை பின்வருமாறு வரையறுத்துக் கொள்ள முடியும்.

கல்வி என்பது அறிகை, திறன்சார் கையளிப்பு என்பதோடு அதனிலும் மேலாக உராய்வுகளின்றி சமூகத்திற்குரிய, பிரதேசத்திற்குரிய, நாட்டிற்குரிய, நியமங்கள், பண்பாடுகள், கலாசாரம், விழுமியங்கள் என்பனவற்றுக்கு மதிப்புக் கொடுக்கும் செயற்பாடுகளுமாகும்.

மனிதநேய விழுமியம், கல்வி தொடர்பான விளக்கங்கள், கருத்துக்கள், எதிர்பார்ப்புகள் மேற்கூறப்பட்டனவாக ஒரு சமூகத்தில், நாட்டில் மனிதநேய விழுமியப் பேணலின் அவசியம் பற்றி அடுத்து நோக்கப்படுகின்றது.

**மனிதநேய விழுமியங்கள்-முக்கியத்துவமும், அவசியமும்.**

ஒரு நாடு அறிவியல், தொழில்நுட்பங்களில் வல்லாண்மை மிக்க நாடாக இருக்கலாம். ஆனால் அங்கு மனிதநேய விழுமியங்கள் பேணப்படாத விடத்து தனிமனிதர்களுக்கிடையே, சமூகங்களுக்கிடை யேயான சீரான இடைவினையுறவு காணப்பட முடியாது. அதனால் அந்நாடு நலம் மிக்க நாடாக விளங்க வேண்டுமென்பது கிடையாது. வல்லாண்மை மிக்க சமுதாயம் நலம் வாய்ந்த சமுதாயமாக இருக்க வேண்டும் என்ற அவசியமும் இல்லை. மனிதநேய விழுமியங்கள் பேணப்படும் சமுதாயங்களில் மட்டுமே மனிதனும் ஏனைய உயிர்களும் சமச்சீர் உறவுடன் வாழ முடியும்.

இன்றைய இருபத்தொராம் நூற்றாண்டில் முக்கியத்துவம் பெற்றுக் காணப்படும் 'நிலைபேண்தகு அபிவிருத்தி' என்ற எண்ணக்கரு பற்றி நோக்கின் நிலைபேண்தகு அபிவிருத்தி என்பது இன்றைய தேவைகளைப் பூர்த்தி செய்வதும், எதிர்காலச் சந்ததிகள் ஏற்றத் தாழ்வின்றி தத்தமது தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதுமாக இடம்பெற வேண்டிய அபிவிருத்தியாகும். பேண்தகு அபிவிருத்தியானது பின்வரும் ஐந்து வழிகாட்டல் தத்துவங்களினால் இயக்கப்படுகின்றது.

1. சுற்றாடல் வரையறைக்குள் வாழ்தல்.
2. உறுதியான ஆரோக்கியமான சமூகத்தை உறுதிப்படுத்தல்.
3. பேண்தகு பொருளாதாரத்தை அடைதல்.
4. நல்ல ஆளுமையை உறுதிப்படுத்தல்.
5. விஞ்ஞான அறிவை பொறுப்புணர்வுடன் பயன்படுத்தல்

(Unesco,2014)

இவை யாவும் ஏற்கெனவே சுட்டப்பட்ட உலகப் பார்வை, பரிசீலிக்கும் பண்பு, கூட்டுறவு மனப்பாங்கு, சுதந்திரம், இயற்கையை நேசித்தல், ஒருமைப்பாடு, வேறுபாடு காட்டாத மனப்பாங்கு, சமச்சீர் உறவு போன்ற விழுமியப் பேணலை அடிநாதமாகக் கொண்டுள்ளதனை உணர முடிகின்றது. சூழலுக்கும் அபிவிருத்திக்குமான உலக ஆணைக்குழு (World Commision on Environment and Development, 1997) நிலை பேண்தகு அபிவிருத்திக்கான அறைகூவலை விடுத்தபோது இயற்கைக் கட்டுமானங்களைப் பேணுவதனூடாக வறுமையொழிப்பு, சமாதானம், சகவாழ்வு, மகிழ்ச்சி போன்ற மனித அடிப்படைத் தேவைகள், விழுமியங்கள் நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் பேணப்பட வேண்டுமென குறிப்பிட்டிருந்தது.

நிலைபேண்தகு அபிவிருத்திக்கான கல்வி தொடர்பான பிரதான செயற்பாடுகளில் இயற்கை வளங்களைப் பயன்படுத்துவதிலும், மனிதன் - இயற்கைக்கிடையிலான தொடர்பினை பேணுவதிலும், கொள்கைகள், குறிகாட்டிகள் தொடர்பான அவதானம், அவர்களின் பொறுப்பியம் போன்றனவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளன. இத்தகைய விளக்கங்களின் வழி விழுமியப் பேணலுக்கும் நிலைபேண்தகு அபிவிருத்திக்குமான உறவினை நாம் புரிந்து கொள்ள முடியும். நிலைபேண் அபிவிருத்தி என்பது கல்வியினூடாக சாத்தியமாகும் என்ற நிலையில்தான் இன்றைய கல்விக் கொள்கைகளும், செயற்பாடுகளும் திட்டமிடப்பட்டு வருகின்றன. அதன்வழி இவை மூன்றுக்கும் இடையிலான தொடர்பினை நாம் உணரமுடிகின்றது.

**வடஇலங்கையும் யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவும்.**

இப்பிரதேசம் இலங்கையின் வடபகுதியில் அமைந்துள்ளது. யாழ்ப்பாணக் குடாநாட்டையும் அதன் மேற்கிலுள்ள தீவுகளையும், தலைநிலத்தின் வன்னிப்பெருநிலப் பரப்பையும் உள்ளடக்கிய பிரதேசமாக விளங்குகின்றது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு என்ற ஐந்து மாவட்டங்களையும் வடமாகாணம் உள்ளடக்கியுள்ளது. ஏறக்குறைய மூன்று தசாப்தகாலமாக (1989 – 2009) உள்நாட்டுப் போரினால் பல இழப்புக்களைக் கண்ட பிரதேசமாகவும் இப்பிரதேசம் விளங்குகின்றது. உள்நாட்டு யுத்தத்தினால் இப்பிரதேசங்கள் அனுபவித்த பதற்றநிலை, சமநிலைக் குழப்பங்கள் ஏராளமானவை. யுத்தமானது இப் பிரதேசத்திலுள்ள மக்கள் யாவரிலும் ஏதோ ஒரு வகையில் தாக்கத்தினை ஏற்படுத்தத் தவறவில்லை. உயிரிழப்புக்கள், அவயஇழப்புக்கள், இடப்பெயர்வு, நலன்புரி நிலையங்கள், அகதிமுகாம் வாழ்க்கை, வாழ்க்கை முடக்கம், உறவுகளின் பிறழ்வுகள், கட்டாயபடை ஆட்சேர்ப்பு, கல்வி இழப்பு, கலாசார அடையாள அழிப்பு, சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் வல்லுறவு, நெறிபிறழ்வுச் செயற்பாடுகள், அளவுக்கு அதிகமான இராணுவ பிரசன்னம், பொருளாதாரப் பின்னடைவு, விவசாய நில அபகரிப்பு, காடழிப்பு, இயற்கைவளச் சூறையாடல், வாழிடங்கள், குடிமனைகள் அபகரிப்பு, கடற்தொழில், ஜீவனோபாயத் தொழில்களுக்கான தடை அல்லது மட்டுப்பாடு எனப் பல பிரச்சினைகளை வட இலங்கை அனுபவித்திருந்தது. அனுபவித்தும் வருகின்றது. அவற்றுக்கும் மேலாக இப்பிரதேசத்தில் இடம்பெற்ற அரசியல் பழிவாங்கல்களுக்கான ஆட்கடத்தல்கள், கொலைகள், கொள்ளைகள் போன்றனவும் நல்ல மனித உறவுகளை நிலைகுலையச் செய்திருந்தன. பொதுவாக எந்தவொரு செல்வாக்கிற்கும் , பாதிப்புக்கும் விரைவாக உட்படுவோர் அல்லது உட்படுத்தப்படுவோர் சிறார்களும், இளம் சமுதாயத்தினருமாகத்தான் இருக்க முடியும் என்பதனை வரலாற்றினூடாக நாம் அறிந்துள்ளோம். சிரியா, பாலஸ்தீனம், குர்திஸ்தான், ஈராக், நைஜீரியா போன்ற நாடுகள் இதற்கான சிறப்பான உதாரணங்களாகும். வட

இலங்கையும் இதற்கு விதிவிலக்கானதல்ல. யுத்தம் முடிவுக்கு வந்து 'சமாதானம் மலர்ந்து' விட்டதாக, 'நல்லாட்சி' நடைபெறுவதாகக் கூறப்பட்டாலும் யுத்தத்தின் தாக்கங்களை, வடுக்களை, வேதனைகளை வடஇலங்கை தொடர்ந்தும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றது.

**வடஇலங்கையில் யுத்தத்தின் பின்னரான சமூகசூழமைவு**

முதலில் சமூகசூழலை எடுத்துக் கொண்டால் பெற்றோரை இழந்த பிள்ளைகள் அல்லது ஒற்றைப் பெற்றோர், குடும்ப அங்கத்தவர், உறவுகளினது உயிரிழப்பு, சொத்திழப்பு, அவய இழப்பு, நலன்புரி நிலைய வாழ்க்கை, வாழ்க்கை முடக்கம், கல்வியில் முழுமையான இழப்பு அல்லது இடைவிலகல் என யுத்தகால இழப்புக்களின் வடுக்கள் தொடர்ந்த வண்ணமேயிருக்கின்றன. யுத்தமானது 'இடப்பெயர்வு' என்பது ஒரு சாதாரண நிகழ்வு என்ற தோற்றப்பாட்டினை உருவாக்கியிருந்தது. பாடசாலைகள், வாழ்விடங்கள் அடிக்கடி ஆக்கிரமிக்கப்படலாம், மக்கள் விரட்டியடிக்கப்படலாம், உயிருக்கு உத்தரவாதமில்லை என்ற அச்சவுணர்வுகள் பொதுவாகத் தோற்றுவிக்கப் பட்டிருந்தன. குறிப்பாக இளம் சமுதாயத்தினர் மனத்தில் இவையெல்லாம் ஆழமாகப் பதிந்துவிட்ட காயங்களாகும். தாம் வாழ்ந்த வீடு, சூழல், சமூகம், உடைமை, உறவுகள், கல்விச்செயற்பாடுகள், நியமங்கள், மனிதப் பெறுமானங்கள் பெருமளவில் சிதைக்கப்பட்ட நிலையில் யுத்தத்தின் பின்னரான சூழமைவினுள் அவற்றின் மேலதிக தாக்கங்களை கண்டு கொள்ள முடிகின்றது.

யுத்தம் வடபுல இளையசமுதாயத்தினரிடையே அறிகைசார், நடத்தைசார் மாற்றங்களை குறிப்பிடத்தக்களவில் ஏற்படுத்தி விட்டுள்ளது. பொதுவாக யுத்தம், இயற்கை அனர்த்தங்களுக்கு பின்னராக இளம்சமுதாயத்தினரை பாதிக்கக்கூடிய நோயாக நெருக்கீடுகளுக்கு பிற்பட்ட 'மனவடுநோய்' (Post Traumatic Strees Disorder - PSTD) காணப்பட்டது. (சிவயோகன், தயாசோமசுந்தரம்,2005,ப.106) இந்த நோயின் தாக்கங்களை இப் பிரதேச இளம் சமுதாயத்தினரிடமும் அடையாளம்

காணக்கூடியதாக இருக்கின்றது. ஆரோக்கியமற்ற அனுபவங்களைச் சந்தித்ததன் விளைவாக பின்வரும் நடத்தைக் கோலங்கள் குறிப்பிடப்படுமளவிற்கு சிறார்களிடையே அவதானிக்கப்படுவதாக உளவியல் ஆராய்ச்சி நிபுணர்கள் கோடிட்டுக் காட்டியுள்ளனர். (சிவாஜினி, உதயகலா,2005.ப.130)

- விவேகக் குறைபாடு
- மெய்பாட்டு முறையீடு
- இழிவிரக்கம்
- மனச்சோர்வு
- ஒதுங்குதல்
- தாழ்வு மனப்பான்மை
- பேச்சில் சிரமம்
- கற்றலில் இடர்பாடு
- பதகளிப்பு
- முரட்டுத்தனம்
- புலன் உறுப்புக் குறைபாடு
- கூட்டாகச் செயற்படுவதில் இடர்பாடு
- மனதினை ஒருமுகப்படுத்த முடியாமை
- பாடசாலைக்குச் செல்ல மறுத்தல்

வடபுல இளைய சமுதாயத்தினரிடையே இன்றைய சூழலில் காணப்படுகின்ற மற்றொரு நடத்தைக் கோலமாக 'ஆக்ரோஷ நடத்தை' (Aggressive) உள்ளது. (மேலது,ப107) போர்ச்சூழலில் மூழ்கி வாழ்ந்த இளைய தலைமுறையினரிடம் சமாதான காலத்திலும் 'வன்மமடைதல்' (Brutalization) என்ற பிரச்சினை தலைதூக்கியுள்ளது. மாணவர்களது சாதாரண பேச்சுவழக்கில் வன்முறைசார் பேச்சுக்கள் இன்று சாதாரணமாகிவிட்டன. “அவனுக்கு மண்டையில் போட்டாத்தான் சரி”, “துவக்கால்தான் பதில் சொல்ல வேண்டும்”, “காதுக்க வைக்க வேண்டும்” என்பன போன்ற பேச்சுக்கள் இன்று வழக்காறு ஆகிவிட்டன.

இவற்றுக்கும் அப்பால் பல்வேறு பெயர்களில் இயங்கும் வன்முறைக் குழுமங்களில் இளம் சமுதாயம் குறிப்பாக உயர்தர வகுப்பு மாணவர்கள் சிலர் இடம்பெற்றிருப்பது, அவ்வப்போது பல்வேறு பத்திரிகைச் செய்திகளினூடாகச் சுட்டிக் காட்டப்பட்டு வருகின்றது. கொலை, திருட்டு, கொள்ளை, வாள்வெட்டு, பாலியல் சேஷ்டைகள், போன்ற வன்மச் செயல்களுடன் இவர்கள் தொடர்பு பட்டிருப்பதனை அறிய முடிகின்றது. சமாதானம் தோற்றுவிக்கப்பட்டு விட்டது, நல்லாட்சி நடைபெறுகின்றது என்று கூறப்பட்டாலும் இவ்வாறான வன்மமடைதல் தொடர்ந்த வண்ணமேயிருக்கின்றது.

கல்விச் செயற்பாடுகளை நோக்கினால் மூடப்பட்ட பாடசாலைகள், இடம்பெயர்ந்த பாடசாலைகள், இடைவிலகிய மாணவர்கள், முழுமையாக கற்றல் செயற்பாடுகளிலிருந்து விலகிய மாணவர்கள், அகதி முகாம் மாணவர்கள், நலன்புரி நிலைய மாணவர்கள் என கல்விசார் போதாமைகள் தொடர்ந்த வண்ணமேயிருக்கின்றன. இவை ஒரு புறமிருக்க இவற்றுக்கும் மேலதிகமாக மாணவர்களை இலக்குவைத்து நடக்கும் போதைப் பொருள் விற்பனை, பாவனை, எமது பாடசாலைச் சிறார்களின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கி விடுமோ என்ற அச்சத்தை தோற்றுவித்துள்ளது. போதைப்பொருள் பாவனையை எமது இளைஞர்களிடம் திணித்து குறிப்பாக பாடசாலை மாணவர்களிடையே விநியோகம் செய்வதில் காட்டப்படும் அக்கறை பற்றி மதிப்புக்குரிய வடமாகாண முதலமைச்சர் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தமை இங்கு சுட்டிக்காட்டப்படத் தக்கது. (தினக்குரல்,10.12.2015,ப.4) போதைப்பொருள் பாவனை, மதுபாவனை, புகைப்பழக்கம் இவற்றின் காரணமாக உறவில் பிறழ்வுகளும், விரிசல்களும் தொடர்கின்றன.

**அட்டவணை 1**

வடஇலங்கையிலுள்ள பாடசாலைகள்

| மாவட்டம் | வலயம் | மொத்த பாடசாலைகள் | இயங்கும் பாடசாலைகள் | மூடப்பட்ட பாடசாலைகள் |
|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் | 116 | 102 | 14 |
| | வலிகாமம் | 154 | 137 | 17 |
| | வடமராட்சி | 87 | 82 | 05 |
| | தென்மராட்சி | 69 | 61 | 08 |
| | தீவகம் | 77 | 63 | 14 |
| கிளிநொச்சி | கிளிநொச்சி | 112 | 104 | 08 |
| மன்னார் | மன்னார் | 92 | 90 | 02 |
| | மடு | 54 | 53 | 01 |
| வவுனியா | வவுனியாவடக்கு | 93 | 85 | 08 |
| | வவுனியாதெற்கு | 109 | 97 | 12 |
| முல்லைத்தீவு | முல்லைத்தீவு | 64 | 60 | 04 |
| | துணுக்காய் | 61 | 61 | - |
| மொத்தம் | | 1088 | 995 | 93 |

(Northern Province Education Sector Vital Statistics-Janu-Feb 2015)

யுத்தத்திற்குப் பின்னரான சூழலில் 'ஒரு நாடு', 'ஒரு தேசம்' என்ற உயரிய நோக்கத்தின் பாற்பட்டதாக வடஇலங்கை நாட்டின் ஏனைய பகுதிகளுடன் மீண்டும் ஒன்றிணைக்கப்படுவதற்கான தரைவழிப்பாதை திறப்பு இடம் பெற்றது. மேலும் அவை 'காப்பெற்' பாதைகளாகவும் மாற்றம் பெற்றன. இழந்தவிட்ட சமூக, கல்வி, பொருளாதார செயற்பாடுகளை ஈடுசெய்வதற்காக வட இலங்கையுள் பல்தேசியக் கம்பெனிகள், கல்வி நிறுவனங்கள், தகவல் தொலைத் தொடர்பு சாதனங்கள் போன்றவற்றின் மிகைவரவும், இலகு கிடைப்புத்தன்மையும் இடம் பெற்றன. இவை யாவும் முன்னைய காலங்களுடன் ஒப்பிடுமிடத்து வட இலங்கை மக்களுடைய கலாசார விழுமியப் பெறுமானங்களில் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளன

என்பதனை நாளாந்த செயற்பாடுகளினூடாக உணர முடிகின்றது. யுத்தகால இழப்புக்கள் சிலவற்றை ஈடுசெய்வதற்காக நகர்த்தப்பட்ட நல்ல விடயங்களாக மேற்கூறப்பட்டவை அமைந்திருந்தாலும் யுத்தகால வடுக்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் மேற்கூறப்பட்டனவற்றினூடான பாதகமான பலன்களை இளம் சமுதாயத்தினரிடையே குறிப்பிடத்தக்களவில் புகுத்தி விட்டன என்று சொல்லுதல் பொருந்தும். கைத்தொலைபேசிகளில் காணப்படும் நவீன வசதிகள், கணனிகள், இணையவழித் தொடர்புகள், முகநூல் பாவனை போன்றன இளைய சமுதாயத்தினரை ஆரோக்கியமற்ற நடத்தைகளுக்கு இட்டுச் சென்றுள்ள நிலைமைகளையும் அறிய முடிகின்றது. (பல்வேறு பத்திரிகைச் செய்திகள்) உதாரணமாக இன்றைய சூழலில் பாலர் பாடசாலைகளுக்குச் செல்லும் சிறார்கள் கூட கைத்தொலைபேசியில் தங்கள் விற்பன்னத்தைக் காட்டக் கூடிய நிலை இருக்கின்றது. கைத்தொலைபேசியில் விளையாட்டு வசதிகள், திரைப்படங்கள், பாடல்கள் என்பன இலகுவாகப் பதிவிறக்கம் செய்யுப்படக்கூடிய நிலையும் உள்ளது.

மேலும் யுத்தகாலத்தில் கட்டாயப்படை ஆட்சேர்ப்புக்களிலிருந்து தப்புவதற்காக நடந்த இளவயதுத் திருமணங்கள், இளம் விதவைகள், பெண் தலைமைத்துவ குடும்பங்கள், வல்லுறவுகள் என்பவற்றினால் ஏற்பட்ட வடுக்கள் இன்னும் புரையோடிக் காணப்படும் பிரதேசமாக வட இலங்கை அல்லாடிக் கொண்டிருக்கின்றது. மேலும் தமது வாழ்வாதாரத்திற்காக பாலியல் தொழில்களை செய்வோரும், சட்டத்திற்குப் புறம்பாக மதுபான உற்பத்தியில் ஈடுபடுவோருமாக ஒருசாரார் உள்ளனர் (District Secretariat Kilinochchi and Mullaitivu). கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் பிரதேசங்களில் வாழும் சாதாரண மக்களோடு கலந்துரையாடுமிடத்து பெறப்பட்ட சில தகவல்கள் அதிர்ச்சியையும் வேதனையையும் தரக்கூடியனவாகும். (நாகரிகம் கருதி அவை தவிர்க்கப்பட்டுள்ளன)

அட்டவணை 2

## Data on vulnerable population

| No | District | Population | Widows | Destitute Women | Disabled Person | Elders |
|---|---|---|---|---|---|---|
| 1 | Jaffna | 607,012 | 27,708 | 4,287 | 8,302 | 63,653 |
| 2 | Killinochchi | 95,616 | 6,735 | 274 | 1,127 | 7,860 |
| 3 | Mannar | 166,367 | 3,115 | 373 | 1,256 | 3,837 |
| 4 | Mullaithivu | 47,114 | 1,287 | 224 | 761 | 1,635 |
| 5 | Vavuniya | 224,216 | 5,062 | 391 | 1,461 | 17,934 |
| Total | | 1,140,325 | 43,907 | 5,549 | 12,907 | 87,059 |

(Kurukularajah.T, Minister of Education, Northen Province,01.09.2014)

அட்டவணை 3

## Data on vulnerable population

| No | District | Blind | Mute | Deaf | Physically Handicapped | Mentally Handicapped | Disability of Leg,Hand |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | Jaffna | 1,581 | 964 | 1,225 | 2,725 | 1,641 | 3,085 |
| 2 | Killinochchi | 375 | 114 | 160 | 699 | 130 | 769 |
| 3 | Mannar | 292 | 149 | 174 | 391 | 266 | 627 |
| 4 | Mullaithivu | 229 | 99 | 137 | 543 | 129 | 549 |
| 5 | Vavuniya | 283 | 229 | 268 | 815 | 302 | 954 |
| Total | | 2,760 | 1,555 | 1,964 | 5,173 | 2,468 | 5,984 |

(Kurukularajah.T, Minister of Education, Northen Province,01.09.2014)

அட்டவணை 4

## Type of Abuses

| Type of Abuses | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 |
|---|---|---|---|---|---|---|---|
| Sexually abused Children | 68 | 81 | 79 | 180 | 232 | 215 | 234 |
| Physically abused Children | 73 | 46 | 33 | 102 | 177 | 101 | 128 |
| Psychologically abused | 6 | 25 | 25 | 16 | 26 | 32 | 60 |
| Attempt to Suicide | 21 | 2 | 20 | 23 | 48 | 36 | 30 |
| Committed Suicide | 5 | 9 | 10 | 2 | 9 | 0 | 12 |
| Neglected Children | 53 | 2 | 24 | 103 | 108 | 125 | 142 |
| Kidnapped Children | 3 | 3 | 6 | 20 | 13 | 7 | 14 |
| Trafficking | 1 | 1 | 14 | 5 | 4 | 3 | 13 |
| Child marriages | 0 | 0 | 13 | 45 | 0 | 0 | 38 |
| Total | 230 | 169 | 224 | 496 | 617 | 519 | 671 |

(Department of Probation and Child Care Services, Northern Provincial Council)

- High number of vulnerable FHH and war widows -59,000

(District Secretariat Kilinochchi and Mullaitivu)

**வடஇலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான பொருளாதாரச் சூழமைவு**

மேற்குறிப்பிட்ட சமூகச்சூழமைவுக்கும் அப்பால் வடஇலங்கையில் உள்நாட்டு யுத்தம் ஏற்படுத்திய பொருளாதார கட்டமைப்புச் சீர்குலைவுகளும் விரயங்களும் இன்றும் இப்பிரதேசங்களில் தாக்கத்தினை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. வடபகுதி பெரும்பாலும் விவசாய நடவடிக்கைகளுக்குட்பட்ட பிரதேசமாகும். யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் போன்ற நிலப்பரப்புக்கள் குறிப்பிடத்தக்களவில் விவசாய பிரதேசங்களாகவே காணப்பட்டன. ஆனால் போர்க்காலத்தில் இடம்பெற்ற அழிவுகள், விவசாய நில அபகரிப்புக்கள், வாழிட அபகரிப்புக்கள், இராணுவ உயர் பாதுகாப்பு வலயம், இராணுவ முகாம்களுக்கென முடக்கப்பட்ட நிலங்கள், வனபரிபாலன திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட நிலங்கள் இப்பிரதேச மக்களின் ஜீவனோபாய விவசாய நடவடிக்கைகளை சின்னா

பின்னப்படுத்தியிருந்தன.

அதே போன்று மக்களுடைய கடற்றொழில் நடவடிக்கைகளும் பெருமளவில் பாதிக்கப்பட்டிருந்தன. மீனவர்களைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணம், வலிவடக்குப் பிரதேச மீனவ கிராமங்கள், மன்னார் முள்ளிக்குள கிராமங்கள் (ஏறக்குறைய 300 குடும்பங்கள்) முகாம் வாழ்க்கைக்கு உட்பட்டிருப்பதாக அறியமுடிகின்றது. (சூசை ஆனந்தனுடனான நேர்காணல், 05.12.2015) மேலும் மீன்பிடித் துறைமுகங்களான தலைமன்னார், மயிலிட்டி, நுரைச்சோலை, ஊர்காவற்றுறை போன்றன தொடர்ந்தும் பாதுகாப்புப் படையினரின் பயன்பாட்டில் இருப்பதும், கடற்றொழில் செயற்பாடுகளை பின்னடையச் செய்திருக்கின்றது. (மேலது) இவை தவிர தென்னிலங்கை மீனவர் வருகை, இந்திய தமிழ்நாட்டு மீனவர் செயற்பாடு போன்றவற்றால் வாரத்தில் மூன்று நாட்களுக்கு வடஇலங்கை மீனவர் ஆழ் கடலுக்கு செல்ல முடியாத நிலையும் காணப்படுகின்றது. (மேலது)

சிறுகைத்தொழில்கள் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் பாதிப்புக்களையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும். தென்னிலங்கை வர்த்தகர்கள் வடபகுதிக்கு வந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுதல், நடைபாதைக் கடைகளை அமைத்தல், யாழ்ப்பாண வர்த்தகர்களுக்கு விதிக்கப்படும் வரி மற்றும் கட்டுப்பாடுகள் தென்னிலங்கை வர்த்தகர்களுக்கு விதிக்கப்படாமை, வீரசிங்கம் மண்டபத்தை வர்த்தக தேவைகளுக்காக தென்னிலங்கை வர்த்தகர்கள் இரண்டு வருட குத்தகை அடிப்படையில் எடுத்திருக்கின்றமை போன்ற செயற்பாடுகளினால் வடஇலங்கை வர்த்தகர்கள் பெரும் நெருக்கடிகளை சந்தித்து வருகின்றனர். (ஜெயசேகரத்துடனான நேர்காணல், 02.12.2015) இத்தகைய செயற்பாடுகளினால் வடபுல பொருளாதார நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்படுகின்றது. பொருளாதாரக் கட்டமைப்புக்களின் உடைவுகளினால் வறுமை, பொருளாதாரப் பின்னடைவு, அரச, அரசசார்பற்ற நிறுவனங்களிடம் கையேந்தி வாழ்க்கை ஓட்டவேண்டிய தேவை, சார்ந்து வாழும் பின்னணி, சுயதொழில் முனைப்பு,

கடன் பெறுதல் போன்ற நிலைமைகள் உருவாக்கப்பட்டுள்ளன. அதனால் இழக்கப்பட்ட, இழக்கப்பட்டுக்கொண்டிருக்கும் பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டியெழுப்புவதில் மக்கள் பெரும் சிரமத்தை எதிர் நோக்கவேண்டியுள்ளது. இழக்கப்பட்ட விவசாய நிலங்கள், தொடர்ந்தும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குள் இருப்பதால் தமது வாழ்வாதாரங்களை இழந்து நிற்போர் ஒருசாரார், சமாதானம், பாதைதிறப்பு, ஒன்றுபட்ட இலங்கை என்ற விடயங்களால் முன்னைய காலங்களைவிட இலங்கையின் ஏனைய பகுதிகளிலிருந்து வந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுவோரினால் பலத்த வர்த்தகப் போட்டிக்கு மத்தியில் தம் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டியிருப்போர் ஒருசாரார், கடன் பட்டும் தொழில்களை உரிய முறையில் செய்ய முடியாது தவிப்போர் ஒருசாரார், இவர்கள் படும் பிரயத்தனங்கள் ஒரு புறமிருக்க், போட்டிச் சந்தையில் நுகர்வோர் படும்பாடு இன்னோர் புறம் என பொருளாதார ரீதியாகவும் போருக்குப் பின்னரான சூழமைவுள் வடஇலங்கை தள்ளாடிக் கொண்டேயிருக்கின்றது. இவ்வகையான நடத்தைக் கோலங்கள் காணப்படும் நிலையில் மனிதநேயம் பற்றிப் பேசுவது, சிந்திப்பது என்பது ஒருவகையில் பொருத்தமற்ற விடயமாகவே தோன்றக்கூடும்.

**யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவினுள் மனிதநேய விழுமியப் பேணலும் - கல்வியின் பங்களிப்பும்.**

வட இலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான சூழமைவினுள் மனிதநேய விழுமியப் பேணலும் கல்வியின் பங்களிப்பும் என்ற இறுதி நோக்கத்தை கருத்திலெடுப்பின் ஏற்கெனவே குறிப்பிடப்பட்டது போன்று மனிதநேய விழுமியப் பேணலில் பாடசாலைக் கல்வியின் பங்களிப்புப் பற்றியே இங்கு கவனம் செலுத்தப்படுகின்றது. அறிவு இன்று அதிகரித்துச் செல்கின்றது. இவ்வதிகரிப்பு சாதாரணமானதல்ல. பல்கிப் பெருகுகின்ற நிலை. இதுதான் 'அறிவுப்பிரவாகநிலை' எனப்படுகின்றது. அறிவு இரட்டிப்பாக எடுக்கின்ற காலம் ஆரம்பகாலங்களில் இருந்ததைவிட

வலுவாகச் சுருங்கிச் செல்கின்றமை கண்கூடு. எந்தத் துறையினை எடுத்துக்கொண்டாலும் ஒருவிடயத்தை அக்குவேறு ஆணிவேறாக ஆராய்ந்து அது பற்றிய அனைத்து அம்சங்களையும் வேண்டிய நேரத்தில், வேண்டிய கோணத்தில், அகன்ற விளக்கங்களுடன் பார்க்கத்தக்க விதத்திலாக தொழில்நுட்பச் சாதனப் பாவனைகள் அதிகரித்துள்ளன. இதனை விட வேறு என்னவேண்டும் என்று மார் தட்டும் போதுதான் வீட்டில் தொடங்கி எல்லா சந்துபொந்துகள் வரை எதிர்நோக்கப்படும் பொருத்தமற்ற, விரும்பத்தகாத நடத்தைகள் கல்வியின் நோக்கம் அறிவுப் பெருக்கம் மட்டுமல்ல அதனையும் தாண்டி 'மன வளவாக்கம்' என்ற வாழ்க்கைக்குத் தேவையான, இன்றியமையாத ஒன்று இருக்கின்றது என்பதனை அழுத்தி உரைக்கின்றது.

அத்தகைய மனித மன வளவாக்கத்திற்கு பங்களிப்புச் செய்கின்ற காரணியாக கல்வி அதி முக்கியத்துவம் பெறுகின்றது. மனித நடத்தையில் நேர்நிலைப்பாங்கான பல நிமிர்நிலை ஏற்றங்களை நிரந்தரமாக ஏற்படுத்தி வாழ்க்கைக்குத் தேவையான பல தளமுகிழ்ப்புகளை வழங்குவதன் ஊடாக சமூக உராய்வுகளின்றி (Social Frictions) வாழ வழி சமைப்பது கல்வியாகும். அந்தவகையில் மாணவர்களது தனிப்பட்ட, சமூகத் தேவைகளின் அடிப்படையில் அவர்களது கலாசார பாரம்பரியத்தினையும், அறிவு நியமங்கள், திறன்கள் போன்றனவற்றையும் அளிப்பனவாக கல்வி விளங்குகின்றது. அத்தகைய கல்வியை மாணவர்களுக்கு முறைசார் ரீதியில் வழங்குகின்ற முக்கிய நிறுவனமாக விளங்குவது பாடசாலையாகும்.

பாடசாலை, பாடசாலைக்கல்வியின் முக்கியத்துவம் பற்றிய ஓரிரு கருத்துக்களை இங்கு முன்வைத்தல் அவசியம். “பாடசாலைக் கல்வியின் இலக்கு நற்பிரசைகளை உருவாக்குவதோடு , ஒவ்வொருதனியாளுக்கும் அவன்வாழும் சமூகத்திற்குப் பொருத்தமானவாறு அச்சமூகத்துள் வெற்றிகரமான நற்பிரசையாக வாழ்வதற்குத் தேவையான தகுதிகளையும் , வலிமைகளையும் பெற்றுக்கொடுத்தல் ஆகும்” (Rao and Reddy,1992,p.15)

மேலும், "பாடசாலை என்பது சமுதாயத்துடன் மிக நெருங்கிய தொடர்பைக் காட்டும் ஒரு சமூக நிறுவனமாகும். பாடசாலைக்கும் சமூகத்திற்குமிடையிலான தொடர்பு மிக வலிமையானது. பாடசாலை அது அமைந்துள்ள சமுதாயத்தின் பண்பாட்டையும், பாரம்பரியங்களையும் விழுமியங்களையும் பிரதிபலிக்கத் தக்கது." (Ruberu,*1980*,p.70)

இலங்கையில் பாடசாலைக் கல்வியென்பது நாடெங்கிலும் பரம்பிக் காணப்படும் பாடசாலை வலையமைப்பினால் ஐந்து வயது தொடக்கம் பதினான்கு வயது வரை (*2009* இல் முன்வைக்கப்பட்ட கல்விச் சிபார்சின்பிரகாரம் *5–16* வயது) மாணவர்களுக்குக் கிடைக்கப்பெறும் கட்டாய பொதுக்கல்வியாகும். அதனால் பாடசாலைக் கல்வி இங்கு கருத்தில் கொள்ளப்படுகின்றது.

எந்த ஒரு செயற்பாடும், அனர்த்தமும் பாடசாலைப் பருவத்தினர் மீது குறுகிய, நீண்டகால தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதனை மறுப்பதற்கில்லை. இலங்கை போர்த்துக்கேயர் (கி.பி *1505 – 1658*), ஒல்லாந்தர் (கி.பி *1658 – 1796*), பிரித்தானியர் (கி.பி *1796 – 1948*) போன்ற ஏகாதிபத்தியவாதிகளின் ஆட்சிக்குட்பட்டிருந்த காலங்களில் அவர்கள் தத்தமது அரசியல், பொருளாதார, சமூக சித்தாந்தங்களை உட்புகுத்துவதற்கான களங்களாக பாடசாலைகளையும், இலக்குக் குழுக்களாக (Target Group) மாணவர்களையும் பயன்படுத்தி வெற்றியும் கண்டிருந்தனர்.

பாடசாலை என்பது பல்வேறுபட்ட சிறிய சிறிய சமூகங்கள் கூடும் இடமாகும். இப்பருவமே நல்லவைகள், கெட்டவைகள் எவையாக இருந்தாலும் அவற்றை ஏற்றுக் கொண்டு தக்கவைத்துக் கொள்ளும் பருவமுமாகும். பாடசாலையில் கற்றுக் கொள்ளப்படுபவைதான் குறிப்பிடத்தக்களவில் எதிர்கால வாழ்க்கைக்கு வழிகாட்டப் போகின்றன. நாட்டின் எதிர்கால குடிமக்களை உருவாக்கும் மையங்களே பாடசாலைகள்.

"நாட்டில் எதனை நாம் அறுவடை செய்ய விரும்புகின்றோமோ அதனை பாடசாலையில் விதையுங்கள்" என்ற நெப்போலியன் பொனபாட்டின் கூற்று மிகப் பிரசித்தி பெற்றதாகும்.

வடஇலங்கையில் யுத்தத்திற்குப் பின்னரான சமூக, பொருளாதார, நிலைமைகள் பலவீனப்பட்டே இருக்கின்றன. அதிலும் இளம் தலைமுறையினராகிய மாணவர் சமுதாயம் பொறுத்த நலிவுகள், பலவீனங்கள் முன்னரை விட முனைப்புப் பெற்றுள்ளன. இந்நிலைமைகளில் மனிதநேய விழுமியம் பற்றிப் பேசுவதற்கோ, பேணுவதற்கோ இடமிருக்குமென எதிர்பார்ப்பதற்கில்லை. ஆயினும் இங்குதான் இத்தேவை அதிகம் உணரப்படவேண்டியுள்ளது. அழுத்தம்பெற வேண்டியுள்ளது. இத்தேவை உணரப்படுமிடத்து, பேணப்படுமிடத்துத்தான் இளைய சமுதாயம் வளம் மிக்க சமுதாயமாக மாற்றம் காண முடியும்.

இலங்கையில் பாடசாலைக் கல்வியைப் பொறுத்தவரையில் மனிதநேய விழுமியப் பேணல் தொடர்பாக மூன்று முக்கிய அம்சங்களை கருத்திற்கு எடுத்துக் கொள்ள முடியும். அவையாவன:

1. பாடசாலைக் கல்வியின் நோக்கங்கள்
2. பாடசாலைக் கலைத்திட்டம்
3. பாடசாலை ஆசிரியர்கள்

**பாடசாலைக் கல்வியின் நோக்கங்கள்**

வட இலங்கை உட்பட இலங்கை பூராவும் கல்விக்கான தேசிய நோக்கங்கள், குறிக்கோள்கள் காலத்திற்குக் காலம் தேசியக்கல்வி ஆணைக்குழுவினரால் முன்வைக்கப்படுகின்றன. அதனடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் (1992) முதலாவது அறிக்கையில் கல்வியின் தேசிய நோக்கங்கள், குறிக்கோள்களாகப் பின்வருவன குறிப்பிடப்பட்டன:

- தேச ஐக்கியம், ஒருமைப்பாடு, ஒருங்கிணைப்பு, முதலியவற்றை எய்துதல்.

- வியாபகமான சமூகநீதியை நிலைநிறுத்தல்.
- ஓம்பக்கூடியதொரு வாழ்க்கைப் பாணிக்குரிய ஆற்றல்களைப் பெறுதல்.
- ஒரே வேளையில் மேன்மையும், மனநிறைவும், தன்னிறைவும் தரக்கூடிய வேலைவாய்ப்புக்களை உருவாக்குதல்.
- நாட்டின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு ஆதாரமான மனிதவள அபிவிருத்தியில் பங்கு பற்றுதல்.
- ஒருவர் மீது ஒருவர் வைத்திருக்கின்ற ஆழ்ந்த இடையறாத அக்கறை உணர்வைப் பேணுதல், அதன் வழி நாட்டு மேம்பாட்டுக்கான முயற்சிகளில் ஈடுபடுதல்.

(தேசியகல்வி ஆணைக்குழு, *1993*,பக்.*07-08*)

அதேபோல தேசியகல்வி ஆணைக்குழு (1997) கல்வியின் தேசிய நோக்கங்கள், குறிக்கோள்களாக கீழ் வருவனவற்றை குறிப்பிட்டிருந்தது:

- வரையறுக்கப்பட்ட வளங்களைக் கொண்ட உலகில்வாழ்வதற்குத் தேவையான அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியனவற்றைப் பெற்றுக்கொள்வதுடன் சுற்றாடல் பற்றிய உணர்வையும்பெறுதல்.
- ஆரோக்கியமான பூரணத்துவமுடைய வாழ்க்கைக்குத் தேவையான பழக்கவழக்கங்களை வளர்த்துக்கொள்ளல்.
- சமூகவாழ்வு, சமூகசிந்தனை ஆகியனவற்றுக்குத் தேவையான பழக்கவழக்கங்களை வளர்த்துக்கொள்ளுதல்.
- நமது நாட்டின் சமய, கலாசார, பாரம்பரியம் தொடர்பான பண்புகளை அறிந்து புரிந்து பேணும் மனப்பாங்கு, திறன்களைப் பெறுதல்.
- சிறப்பான ஆக்க சக்தியும், சமாதானமும், நீதியுமுடைய செயற்பாடுகளைக் கொண்ட பிரஜைகளுக்குரிய பண்புகளை வளர்த்தல்.
- பிறரின் சொத்துக்கள், கருத்துக்கள், வாழ்க்கை போன்றவற்றிற்கு மதிப்பளித்தல்.

(தேசியகல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை, *1997*,பப.*10-12*)

கல்வியின் தேசிய நோக்கங்கள் மட்டுமல்லாது பாடசாலைகள் கொண்டிருக்க வேண்டிய விழுமியம்சார் நோக்கங்களும் முன்வைக்கப்பட்டிருந்தன:

- மாணவர்கள் மத்தியில் நல்ல ஆரோக்கியமான பழக்க வழக்கங்களைப் பயிற்றுவித்தல்.
- நாட்டுப்பற்றினை வளர்த்தல்.
- சமுதாயத்தினால் விரும்பப்படும் விழுமியங்களையும், நற்பண்புகளையும் கடைப்பிடிக்க உதவுதல்.
- குழுமுயற்சி, சட்டதிட்டங்களுக்கு அமைய ஒழுகும் பண்பு, ஆரோக்கியமான போட்டி மனப்பான்மை ஆகியனவற்றை வளர்த்தல்.
- சமூகங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்க்க உதவுதல்.(மேலது)

தேசியக்கல்வி ஆணைக்குழுவின் (2003) பொதுக்கல்விக்கான பிரதான பரிசீலனைகளை நோக்குதல் அவசியமானது. கல்விக்கான தேசிய இலக்குகளாக பின்வருவன அடையாளம் காணப்பட்டன:

- மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருக்கள் தேசியப் பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
- மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகம் கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
- மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

- ஒருவரது உடல் உள நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.
- நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
- தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனித வள அபிவிருத்தி.
- தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
- நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும், திறன்களையும் வளர்த்தல்.

(இலங்கையின் பொதுக்கல்வி பற்றிய தேசிய கொள்கைச் சட்டகமொன்றுக்கான ஆலோசனைகள், தேசிய கல்வி ஆணைக்குழு, 2003, பப.56-57)

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத்தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**அடிப்படைத் தேர்ச்சிகள்**

1. தொடர்பாடல் தேர்ச்சிகள்

   தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை: எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு,தகவல் தொழில்நுட்பத் தகைமை.

2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

   - ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிவு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணிசெய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
   - நேர்மை, சகிப்புத் தன்மை மனித கௌரவத்தை கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
   - மன எழுச்சிகள் நுண்ணறிவும்.

3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

   - சமுகச்சூழல் - தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணறிவும் திறன்களும், நீதி, சமூகத்தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், உரிமைகள் பொறுப்புகள், கடமைகள் என்பவற்றில் அக்கறை.
   - உயிரியல் சூழல்
   - பௌதிகச் சூழல்

4. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்

   - அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும் ஒழுக்கநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளை பொருத்தமுற மேற்கொள்ளவும், விழுமியங்களை தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

5. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல் விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள்

   - அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு. மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேர பொழுதுபோக்குகள், மற்றும் வாழ்வின்

ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்பநுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் போன்ற மனித அனுபவங்கள். இவைதவிர

6. வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்,
7. கற்றலுக்குக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்.

(மேலது, பப.57-58)

2007 ஆம் ஆண்டின் பொதுக்கல்வி நோக்கங்களையும் சிறிது கவனத்தில் கொள்வது நன்று. இடைநிலைக்கல்வி தொடர்பாக முக்கிய நோக்கமாக நாட்டுக்குப் பயனுடைய நல்லறிவும் பண்புகளும் நிரம்பப்பெற்ற பிரசைகளை உருவாக்குதல் என்பது இடம் பெற்றது. அதன்வழி ஒரு பிள்ளை பூரணமான ஆளுமையைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு சிந்தனைத்திறன், சமூகதிறன், சுயதிறன் என்ற மூவகைத் திறன்களையும் பாடசாலைக் கல்வியினூடாகப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டது. (கினிகே,2008,பப.49-50) இங்கு சிந்தனைத் திறன்கள், சமூகதிறன்கள், சுயதிறன்கள் பற்றிக் குறிப்பிடப்படும்போது பல்வேறு மனிதநேய விழுமியங்கள் முதன்மைப்படுத்தப்பட்டன. பின்வரும் சட்டகம் மூலம் அதனை அறிந்து கொள்ளலாம்.

ஒன்றிணைந்த ஆளுமை
(Integrated Personality)

சிந்தனைத் திறன்கள்
(Thinking Skills)

- ஆக்கச்சிந்தனை
- பகுப்பாய்வுச் சிந்தனை
- தர்க்க சிந்தனை
- தீர்மானம் எடுத்தல்
- பிரச்சினை தீர்த்தல்
- முரண்பாட்டு முகாமை

சமூகத்திறன்கள்
(Social Skills)

- மனவெழுச்சிச் சமநிலை
- உளநெருக்கிடை முகாமை
- நன்மாற்றங்களை ஏற்படுத்தல்
- முயற்சியாண்மை
- வகை சொல்லல்
- அர்ப்பணிப்பு
- சுயஒழுக்கம்

சுயதிறன்கள்
(Personal Skills)

- பணிவுடன் செவிமடுத்தல்
- ஏனையோர் மீது கருணைகாட்டல்
- ஏனையோருடன் பகிர்ந்துபரிமாறிக் கொள்ளல்
- தொடர்பாடல்
- தலைமைத்துவம் ஏற்றல்

(கினிகே,2008,ப.ப49-50)

பொதுக்கல்விக்கான புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான தேசிய குழுவினருடைய இறுதி அறிக்கையை (2009) இங்கு நோக்குதல் மேலும் பொருத்தமானது. தேசியகல்வி முறைமைக்கான நோக்கங்கள், இலக்குகளாகப் பின்வருவன இடம் பெற்றன:

- தேசிய பிணைப்பு, தேசிய ஒருமைப்பாடு மற்றும் தேசிய ஐக்கியத்தின் ஊடாக தாய் நாட்டின் மீது அன்பும் அர்ப்பணிப்பும் கொண்ட இலங்கைப் பிரஜையை விருத்தி செய்தல்.
- பொறுமையையும் நல்லிணக்கத்தையும் மேம்படுத்தி இலங்கையின் பன்மைத்துவ இயல்பு மற்றும் கலாசார பல்வகைமையை ஏற்று மானிட கௌரவத்தை மதித்தல்.
- மாறும் உலகத்தின் அறைகூவல்களுக்கு துலங்கும் அதேநேரத்தில் தேசத்தின் மரபுரிமைகளின் பெருமைமிகு அம்சங்களை அங்கீகரித்து பாதுகாத்தல்.
- சமூக நீதி மற்றும் ஜனநாயக வாழ்வியல் சார்ந்த விழுமியங்கள் நிறைந்த ஒரு சூழலை உருவாக்கிப் பேணல்.
- மானிட விழுமியங்களை மதித்தல், மற்றும் நிலைபேண்தகு அபிவிருத்தி ஆகியவற்றின் அடிப்படையிலான ஒரு வாழ்க்கைப்பாங்கினை மேம்படுத்தல்.
- தனிநபர்களின் உடல், உள, மனவெழுச்சி சார்ந்த நலன்களை மேம்படுத்தல்.
- நன்கு ஒன்றிணைக்கப்பட்ட மற்றும் சமநிலையான ஆளுமைக்குரிய பண்புக் கூறுகளை உருவாக்கிப் பேணல்.
- பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யக் கூடியதாக தனி மனிதன் மற்றும் தேசத்தின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தும் பயனுள்ள பணிகளை ஆற்றக்கூடிய மனித வளத்தை விருத்தி செய்தல்.
- மாற்றங்களுக்கு இணங்கி அவற்றை முகாமை செய்யக்கூடிய வகையிலும் துரித மாற்றங்கள், சிக்கல்கள் மற்றும் எதிர்பாராத

சூழ்நிலைகளை சமாளிப்பதற்கான இயலளவை விருத்தி செய்யக் கூடிய வகையிலும் தனிநபர்களை வலுவூட்டல்.

- உலக சமூகத்தில் ஒரு கௌரவமான இடத்தைப் பெறக்கூடிய நவீன அறிவுக்கு உகந்தவகையில் சுதந்திரமான உலக நோக்கினை உருவாக்கிப் பேணல்.

(பொதுக்கல்விக்கான புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான தேசிய குழுவினருடைய இறுதி அறிக்கை,2009,பப.3-7)

பாடசாலைக்கல்வியின் நோக்கங்கள், இலக்குகள், மனிதநேய விழுமியப்பேணலை, பெறுமானங்களை வலியுறுத்துவனவாகவே காலத்திற்குக்காலம் முன்வைக்கப்பட்டதை மேற்கூறப்பட்ட அறிக்கைகள் ஊடாக விளங்கிக் கொள்ள முடியும். பாடசாலைக்கல்வியின் நோக்கங்களை, இலக்குகளை அடையப் பெறுவதற்கான ஊடகமாகக் கருதப்பட்டதே பாடசாலைக் கலைத்திட்டமாகும். அதனால் பாடசாலைக் கலைத்திட்ட நிலைப்பாடுகள் அடுத்து நோக்கப்படுகின்றது.

**பாடசாலைக் கலைத்திட்டம்**

காலத்திற்குக்காலம் முன்வைக்கப்பட்ட கலைத்திட்டம் தொடர்பான மாற்றங்களில் பாடநெறிகள் (Streams), பாடங்கள் (Subjects), பாட உள்ளடக்கம் (Contents), கற்றல் கற்பித்தல் முறைமைகள் (Learning – Teaching Methods), பயிற்று மொழி (Medium of Instruction) போன்றன தேவைக்கேற்ப மாற்றம் கண்டிருந்தன. 1997 இன் கலைத்திட்ட சீர்திருத்தத்திலும், 2007 இன் கலைத்திட்ட சீராக்கத்திலும் இடம் பெற்ற பாடமாற்றங்கள், பாடஉள்ளடக்க மாற்றங்கள், கற்றல் கற்பித்தல் முறைமைகளை நோக்கும் போது நாட்டின் தேவைகளுக்கும், உலகளாவிய செல்நெறிகளுக்குமேற்ப அவை திட்டமிடப்பட்டிருந்தாலும் அவற்றினூடாக மறைமுகமாகவோ, நேரடியாகவோ மனிதநேய விழுமியப்பண்புகள், அவற்றின் அவசியம் வலியுறுத்தப்பட்டிருந்தன. தாய்மொழி, சமயம், சமூகக்கல்வியும் வரலாறும், குடியுரிமைக்கல்வி, வாழ்க்கைத்தேர்ச்சி, அழகியற்கல்வி ஏன் விஞ்ஞான தொழில்நுட்ப பாடங்களினூடாகவும்

இவற்றினை அறிய முடியும். உதாரணத்திற்கு 1997 இன் கலைத்திட்ட மாற்றத்தில் இடம்பெற்ற வாழ்க்கைத்தேர்ச்சி (Life Competency) என்ற பாடத்தினை கருத்திற்கெடுத்தால் பாடமும் (Subject), பாட உள்ளடக்கங்களும் (Contents of the Subject) நான்கு முக்கிய கூறுகளை அடிப்படையாக்கி வடிவமைக்கப்பட்டிருந்தன:

1. தனியாள் விருத்தி (Personal Development) – உணர்வுகளுக்கு மதிப்பளித்தல், சமூகத்திற்கு தேவையான, தேவைப்படாத சமூக வலுக்களை பரிசீலித்தல், இனம்காணுதல், சுயஅடையாளம் பேணல்.
2. ஆளிடைத்தொடர்புகள் (Interpersonal Relation) – சமத்துவம், பன்மைத்துவத்தை அங்கீகரித்தல், முரண்பாடுகளைத் தீர்த்தல், குழுத்தொடர்பாடலும், வேலைப்பகிர்வும்.
3. சுயஒழுங்கமைப்பு நடைமுறைகள் (Self-Organizing Practices) – திட்டமிடுதல், தீர்மானம் எடுத்தல்.
4. தொழில் வழிகாட்டலும் தொழில் தீர்மானமும் - தொழில் பன்மைத்துவத்தை புரிந்துகொள்ளல். தொழில் மகத்துவத்தைப் பேணல் - (LalPerera, SwarnaWijetunge, Balasooriya,2000,p.401)

வாழ்க்கைத்தேர்ச்சி பாடத்தை பொருத்தமாக கற்பித்த ஆசிரியர்கள் பின்வரும் நல்ல மாற்றங்களை மாணவர்களிடம் கண்டு கொண்டதாக குறிப்பிட்டிருந்தார்கள். அத்தகைய மாற்றங்களாவன:

1. இயற்கையுடனான சமச்சீர் உறவு பேணல்.
2. வாழ்க்கை தொடர்பான நேர்ச்சிந்தனை
3. முரண்பாடுகளை முகாமை செய்தல்
4. ஆக்கசிந்தனை
5. தொடர்பாடல் முறைகளில் நேர்மனப்பாங்கு.
6. பொறுப்புணர்வு
7. சுயமதிப்பு

(மேலது,ப. 402)

இதனூடாக ஒற்றுமை, வேறுபாடு பாராட்டாத மனப்பாங்கு,

பரீசீலிக்கும் மனப்பாங்கு, காருண்யம், உடல்உளநலமேம்பாடு, இயற்கையை மதித்தல், நேசித்தல், சமச்சீர் உறவுபேணல், உலகப்பார்வை, விட்டுக்கொடுப்பு போன்ற மனிதநேய விழுமியம்சார் எண்ணக்கருக்கள் பரவ விடப்பட்டிருந்தமையை அறியலாம்.

ஆயினும் 2007 இல் இடம்பெற்ற கலைத்திட்ட மாற்றத்தில் மேற்கூறப்பட்ட பாடம் நீக்கப்பட்டு வாழ்க்கைத் தேர்ச்சியும் குடியுரிமைக் கல்வியும் (தரம் 6 தொடக்கம் தரம் 9) என்பதாக மாற்றம் காணப்பட்டாலும் பாடப்பரப்புகளிலே மனிதநேய விழுமியம் தொடர்பான எண்ணக்கருக்கள் இடம்பெற்றிருந்தமையை பாடநூல்களை பார்வையிட்டோர் அறிந்திருப்பர்.

இலங்கையில் பொதுக்கல்விக்கான புதிய கல்விச் சட்ட முன்மொழிவுகளின் இறுதி அறிக்கை (2009) கற்றல் - கற்பித்தல் முறைமை தொடர்பாக பின்வருவனவற்றை சுட்டிக்காட்டியிருந்தது. ஏனெனில் கற்றல் - கற்பித்தல் நடைமுறைகளின் ஊடாகவே மாணவர், ஆசிரியர் என்ற இருசாராரும் பல்வேறு மனிதநேயவிழுமியங்களை அறியவும், அனுசரிக்கவும் அதிகளவு வாய்ப்புகள் காணப்படும் என்பதனாலாகும்.

1. ஒவ்வொரு பிள்ளையும் கற்றலின் மூலம் உண்மையான திருப்தியடையக் கூடியதாக கற்றல் கற்பித்தலில் புதிய அணுகு முறைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.
2. வாழ்க்கைத்தேர்ச்சிகள், பொதுத்திறன்கள் மற்றும் விழுமியங்கள் உட்பட பல்வேறுவிதமான பாடத்தேர்ச்சிகளை விருத்தி செய்ய கற்றல் - கற்பித்தல் செயன்முறை பிள்ளைகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும்.
3. பிள்ளைக்கு நட்புறவான சூழ்நிலை மற்றும் அழுத்தம் இல்லாத நிலைமைகள் மூலம் கற்றல் மேம்படுத்தப்பட வேண்டும்.
4. பிள்ளைகளை வேலை உலகிற்கு திசை முகப்படுத்தக் கூடிய வகையில் தொழில்நுட்பப் பாடங்கள் இணைத்துக் கொள்ளப்படு வதோடு பாடங்களின் உள்ளடக்கத்தை பொருத்தமாக வழங்குவதற்கு ஏற்றவாறான கற்பித்தல் முறைகள் பின்பற்றப்படல் வேண்டும்.

(இலங்கையில் பொதுக்கல்விக்கான புதிய கல்விச் சட்ட முன்மொழிவுகளின் இறுதி அறிக்கை,2009,பப.94-95)

அதற்கும் அப்பால் பாடசாலை இணைக்கலைத்திட்டத்தினை இங்கு குறிப்பிடலாம். வகுப்பறை கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளுக்குப் புறம்பாக இணைக் கலைத்திட்ட விடயங்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. பல்வேறு விழாக்கள், வாழ்க்கைத்திறன் நிகழ்வுகள், கண்காட்சிகள், போட்டிகள், கல்விச்சுற்றுலாக்கள், கல்விப் பாசறைகள், சிரமதானம், சூழல் பாதுகாப்பு நிகழ்ச்சிகள், கல்வி வெளியீடுகள், சஞ்சிகை வெளியீடுகள், பல்வேறு தினக்கொண்டாட்டங்கள், சர்வதேச தினக்கொண்டாட்டங்கள், என்றவாறாக பாடசாலை இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இவற்றினூடாக மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், கல்வி நிர்வாகிகள், கல்விப்புலத்தைச் சார்ந்தவர்கள், கல்விப்பிரதிநிதிகள், பெற்றோர், அயற்சமூகம் என பல்வகைப்பட்டவர்கள் கூடிச் செயற்பட முடிந்தது. அதனூடாக மனிதநேய விழுமியங்களின் பெறுமானங்கள் புரியவைக்கப்பட்டன, பேணப்பட்டன. அல்லது புரிந்து கொள்வதற்கான, பேணுவதற்கான தூண்டுதல்கள் இடம்பெற்றன.

பாடசாலைக் கல்வியின் நோக்கங்கள், இலக்குகள் கலைத்திட்டத் தினூடாக முன்னெடுக்கப்பட அவற்றை முன்னெடுப்பவர்களாக ஆசிரியர்கள் விளங்குகின்றனர். அதனால் ஆசிரியர்கள் பற்றி அடுத்து கவனத்தில் கொள்வோம்.


**பாடசாலை ஆசிரியர்கள்**

கலைத்திட்டத்தின் முக்கிய பங்குதாரர்களாக மாணவர்களும், ஆசிரியர்களும் விளங்கினாலும் ஆசிரியர்களுக்கான பங்களிப்பு இதில் காத்திரமானது என்றே கூறவேண்டும். ஆசிரியர்கள் அறிவுக் கையளிப்பு செய்பவராக, வளவாளராக, வழிப்படுத்துனராக தனது அறிவு, திறன், கற்பித்தல் முறைகள், அணுகுமுறைகள், தொடர்பாடல் தேர்ச்சிகள் மூலம் மாணவர்களுக்கான முன்மாதிரியாகச் (Role Model) செயற்பட

வேண்டியவர்களாக உள்ளனர். இது தொடர்பாக இந்திய தேசியக் கல்வி நிறுவனம் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தமை இங்கு கவனிக்கத் தக்கது.

"கலைத்திட்டத்தினூடாக எல்லாவிதமான நோக்கங்களும், தேர்ச்சிகளும் மாணவர்களிடம் வளர்க்கப்பட வேண்டுமென்றால் அது ஒவ்வொரு ஆசிரியர்களினதும் கைகளிலேயே தங்கியுள்ளது." (இந்திய தேசியக் கல்வி நிறுவனம்,2000,ப.67) டாக்டர் இராதாகிருஷ்ணனின் வார்த்தைகளையும் இங்கு கோடிட்டுக்காட்டுதல் பொருந்தும். "உண்மையான கலாசாரம், விழுமியப் பெறுமானங்கள் கட்டமைக்கப் படுவதென்பது பொறியியலாளர்களாலோ, தொழில் நுட்பவியலாளர்களாலோ சாத்தியமாகாது, மாறாக ஆசிரியர்களால் மட்டுமே அது இயலக்கூடியது." (மேலது) ஆசிரியர்கள் மீதான நம்பிக்கையை வெளிப்படுத்துவதாக இக்கூற்று அமைகின்றது. இத்தகைய கருத்துக்கள் வடஇலங்கை ஆசிரியர்களுக்கும் பொருந்துவனவாகவே இருக்கின்றன. கலைத்திட்டத்தினூடாக எல்லாவிதமான நோக்கங்களையும், தேர்ச்சிகளையும் வளர்த்தெடுக்க வேண்டியவராக ஆசிரியர் விளங்கின்றார். 21 ஆம் நூற்றாண்டுக்கான ஆசிரியர் வகிபங்கு பின்வருமாறு எதிர்பார்க்கப்படுகின்றது.

**21 ஆம் நூற்றாண்டுக்கான ஆசிரியர் வகிபாகம்**




இன்று ஆசிரியர்களுடைய வகிபாகமானது 'நிலைமாற்று வகிபாகமாக' மாற்றமடைந்துள்ளது. இங்கு நிலைமாற்று வகிபாகம்

பற்றியும் சிறிது குறிப்பிடுதல் அவசியம். இலங்கை பாடசாலைகளில் ஆசிரியர் வகிபாகமானது காலத்திற்கு ஊடாக மூன்று விதமாக மாற்றம் கண்டு வந்துள்ளது.

1 – கடத்தல் வகிபாகம் (**Transmission Role**) - விரிவுரை முறை. அறிவைக் கடத்துபவர், ஒருவழித் தொடர்பு (ஆசிரியர் மட்டும்)

2 – கொடுக்கல் வாங்கல் வகிபாகம் (**Transaction Role**) - சம்பாசணை முறை, வசதிப்படுத்துனர், இருவழித்தொடர்பு (ஆசிரியர் - மாணவர்)

3 – நிலைமாற்று வகிபாகம் (**Transformation Role**) - மாணவர் செயற்பாடுகள், வளவாளர், பலவழித் தொடர்பு (மாணவர் - ஆசிரியர், மாணவர் - மாணவர்)

நிலை மாற்று வகிபாகத்தில் மாணவர்களது பல்வேறு திறன்களும் தேர்ச்சிகளும் வெளிக்கொணரப்பட முடியும்,. மாணவர்கள் தாமாகவே செயற்படுவதன் ஊடாக பல்வேறு தேர்ச்சிகளையும் வளர்த்துக்கொள்ள முடியும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. அதனால் மாணவர்கள் தத்தமது செயற்பாடுகளினூடாகவே மனிதநேய விழுமியங்களை அடையாளம் கண்டு தக்கவைத்துக்கொள்வதற்கு வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படுகின்றன.

வடஇலங்கை நிலைமைகளைப் பொறுத்தமட்டில் நிலைமாற்று வகிபாகத்தினுடைய முக்கியத்துவம் ஆசிரியர்களால் முழுமையாக உணரப்படவில்லை என்பதை அனுபவ ரீதியாக அறிய முடிகின்றது. பல தரப்பட்ட சமூக, பொருளாதார, பிரச்சினைகளுடன் வரும் பிள்ளைகளை ஒன்று சேர்க்கும் மையங்களாக வடபகுதி பாடசாலைகள் விளங்குகின்றன. அதனால் இன்றைய சூழலில் வடஇலங்கையைப் பொறுத்தவரையில் கல்விதொடர்பாக வளப்பிரச்சினை, மாணவர் இடைவிலகல், மாணவர்கல்வி இழப்பு, வரவின்மை, கோஷ்டி மோதல்கள், போதைப் பொருள் பாவனை, பல்வேறுபட்ட பெரிய, சிறிய நெறிபிறழ்வுச் செயற்பாடுகள், பொருத்தமற்ற குடும்பச் சூழல், பொருளாதாரச் சீரின்மை

போன்ற சூழமைவினுள் இருந்து மாணவர் வரவேண்டியுள்ளது. முடிந்தவரையில் மாணவர்களை கல்விச் செயற்பாடுகளுக்குள் உள்நுழைக்க வேண்டிய பாரிய பொறுப்பு மிக்கவர்களாகவும், அதேசமயம் பாடசாலை மாணவர்களிடையே மனிதநேய விழுமியப் பேணலின் அவசியத்தை, பெறுமானத்தை நடைமுறைச் செயற்பாடுகள் ஊடாக, அனுபவங்கள் ஊடாக உணரவைக்க வேண்டியவராகவும் ஆசிரியர் விளங்குகின்றார். இப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு முதலில் வடபுல ஆசிரியர்கள் பின்வரும் விடயங்களில் அக்கறை கொண்டிருக்க வேண்டுமெனச் சுட்டிக்காட்டப்படுகின்றது:

1. ஆசிரியர் மனிதநேய விழுமியங்களின் பெறுமானங்களை உணர்ந்திருத்தல், ஏற்றுக்கொள்ளல்.
2. மனிதநேய உணர்வுடன் மாணவர்களுடன் உரையாடுதல்.
3. பல்வேறு பாடங்களையும் கற்பிக்கும் போது விழுமியம்சார் பெறுமானங்களை மாணவர்கள் தாமாக உணரும் விதத்தில் வழிகாட்டுதல், நினைவூட்டுதல்.
4. மாணவர்களுடன் திறந்த மனத்துடன் கலந்துரையாடல், விவாதித்தல்.
5. வெளிப்படையாகப் பேசுதல்.
6. ஒப்பீடு செய்யாதிருத்தல்.
7. மாணவர்களிடமான அச்ச உணர்வினைத் தவிர்த்தல்.
8. தற்சார்புச் செயற்பாடுகளை ஊக்குவித்தல்.
9. கற்றல்- கற்பித்தல் சூழலை இறுக்கமற்றதாக்குதல்.
10. முடிந்தவரை மாணவர்களுக்கு சம வாய்ப்புக்களை வழங்குதல்.
11. அழகுணர்வு, இயற்கையை நேசித்தல், போன்றனவற்றின்பால் மாணவர்களை ஈடுபடச் செய்தல்.
12. ஆசிரியர்-மாணவர், ஆசிரியர்-பெற்றோர் உறவினை நம்பிக்கையுடையதாக்குதல்.

(சிரேஷ்டஆசிரியர்களுடனானகலந்துரையாடல்)

மேலும் ஆசிரியர்கள் பிள்ளைகளிடம் நடத்தை மாற்றங்களை

ஏற்படுத்துவதற்காக பின்வரும் நுண்முறைகள் பற்றி அறிந்திருக்க வேண்டியது அவசியமெனவும் வலியுறுத்தப்படுகின்றது.

1. மாணவன் தனது நடத்தையை தானே விரும்பும்படி மாற்றியமைத்துக்கொள்ளும் வகையில் தூண்டல்களை வழங்குதல்.
2. ஆசிரியர்கள் மாணவர்கள் கூறுவதை பரிவுடன் கேட்டு அவர்களது உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ள முயலுதல்.
3. பாடத்திட்டமிடலுடன் கற்றல் - கற்பித்தலை நகர்த்துதல்.
4. கற்கப்படும் பாடப் பொருளை (Subject Content) மாணவன் எளிதில் கற்கக்கூடியதாக மிகச்சிறிய படிகள் அல்லது பகுதிகளாக பகுத்து தொடர்புபடுத்தி கற்கச் செய்தல். ஒவ்வொரு படிகளும் நிறைவுற்றதும் பொருத்தமான வினாக்கேட்டு உடனடி மீள வலியுறுத்தலை (Immediate Feedback) செய்தல்.
5. கற்றல் -கற்பித்தலின் மூலம் பிள்ளை விருத்தியை துரிதப்படுத்துவதற்கு, மாணவர்களது கவனத்தை கவர்ந்து அது திசைமாறா வண்ணம் தொடர்ந்து அதனைக் கட்டுப்படுத்தும் நுண்முறைகளை அறிந்திருத்தல்.
6. கற்றல் - கற்பித்தலுக்கான தேர்ச்சிகளையும் முக்கியத்துவத்தையும் ஆசிரியர் தெளிவாக விளங்கிக்கொள்ளல்.
7. வினைத்திறன் மிக்க தூண்டல் துலங்களை ஊக்குவித்தல், நகைச்சுவை உணர்வைப் பயன்படுத்தல். எவ்வகையிலும் மாணவர்களோடு முரண்படுதலைத் தவிர்த்தல்.
8. பாடப்பொருள், மாணவர் வேறுபாடு, வகுப்பறைச் சூழல் என்பவற்றுக்கேற்ப ஆசிரியர் தன்னை ஆயத்தம் செய்து அர்ப்பணிப்பு சிந்தையோடு கற்பித்தல்.

(சிரேஷ்ட ஆசிரியர்களுடனான கலந்துரையாடல்)

ஆனால் ஆசிரியர்களைப் பொறுத்த வரையில் மேற்கூறப்பட்ட செயற்பாடுகளில், நுணுக்கங்களில் அவர்கள் அக்கறை காட்டுவதில்லை.

அதற்கான கால அவகாசம் கிடைப்பதில்லை என்றும் சொல்லப்படுகின்றது. (சிரேஷ்ட ஆசிரியர்களுடனான கலந்துரையாடல்) ஏனெனில் பாடங்கள், இணைப்பாடங்கள், கற்பித்தல் செயற்பாடுகள் யாவும் இலங்கை முழுவதற்குமான பொதுத்தேர்வுகளை மையப்படுத்தியே முன் நகர்த்தப்படுகின்ற நிலையில் அதன்வழி தாமும் செயற்படவேண்டிய தேவையுள்ளதாக ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

வடஇலங்கை ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் பல்வேறு பின்னடைவுகள் தொடர்ந்தும் சுட்டிக்காட்டப்பட்டே வருகின்றன. ஏற்கெனவே குறிப்பிட்டது போன்று பொதுக்கல்வி, பாடசாலைக் கல்வியின் நோக்கங்கள், கலைத்திட்டங்கள் மனிதநேய விழுமியப்பேணலை குறிப் பிடத்தக்களவில் வலியுறுத்துகின்றன. அதனை நடைமுறைப்படுத்துவதில் முக்கிய பங்குதாரர்களான ஆசிரியர்கள் அதன்பால் அக்கறை காட்டவில்லை. மாணவர்களுக்கான வழிகாட்டல்களை போதியளவில் செய்யவில்லை. அர்ப்பணிப்புடன் அவர்கள் செயற்படவில்லை என்ற குறைபாடுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. ஆசிரியர் தொடர்பான குறைபாடுகளை முன்வைப்பது எமது நோக்கமல்ல. ஆயின் அக்குறைபாடுகள் ஆசிரியர்களால் உணரப்பட்டு களையப்பட வேண்டியது மிகமிக அவசியம்.

**முடிவுரை**

இதுவரை மனிதநேயவிழுமியங்கள் தொடர்பான கருத்துக்கள் விளக்கங்கள், கல்விக்கான வரைவிலக்கணங்கள், எதிர்பார்ப்புகள், மனிதநேயவிழுமியங்களுக்கான இன்றைய தேவை போன்ற பல்றே அம்சங்கள் நோக்கப்பட்டன. இவற்றுக்கு மேலாக வட இலங்கையில் யத்தத்திற்குப் பின்னரான சூழமைவு எவ்வாறு இருக்கின்றது என்பதும் நோக்கப்பட்டது. சீரற்ற இச் சூழமைவுள் மனிதநேயவிழுமியங்களின் முக்கியத்துவம் உணரப்படுவதில், பேணப்படுவதில் பாடசாலைக் கல்விக்கான பங்களிப்பு எவ்வாறு உள்ளது என்ற நிலைமைகளும்

ஆராயப்பட்டன.

மனிதநேயவிழுமியப்பேணலில் பாடசாலைக்கல்விக்கான பங்களிப்பு பற்றி நோக்குமிடத்து பாடசாலைக்கல்வியின் நோக்கங்கள், பாடசாலைக்கலைத்திட்டம், பாடசாலை ஆசிரியர்கள் என்ற மூன்று அம்சங்களும் கவனத்திற் கொள்ளப்பட்டன. பாடசாலைக்கல்வியின் தேசிய நோக்கங்கள் காலத்திற்குக்காலம் தேசிய ஆணைக்குழுக்களின் சிபாரிசிற்கு ஏற்ப பேண்தகு அபிவிருத்தி, இயற்கைவள முகாமை, பாதுகாப்பு, மனிதவலுட்டல், மனிதவளவிருத்தி, சமூகநீதி, சமத்துவம், தனிமனித, சமூக, சிந்தனைத் திறன் விருத்தி, பொறுப்புணர்வு, பரிசீலிப்பு போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தன. இவற்றினூடாக மனிதநேயவிழுமியங்களின் பெறுமானம் உணரப்பட்டமையை அறியமுடிகின்றது.

அதே போன்று மனிதநேயவிழுமியப்பேணலில் பாடசாலைக் கலைத்திட்ட வடிவமைப்பு, நடைமுறைகளை நோக்கின் பாடங்கள், பாடஉள்ளடக்கங்கள், கற்றல்-கற்பித்தல் முறைமை என்பனவற்றினூடாக மனிதநேய விழுமியத்திற்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவத்தை அறியமுடிகின்றது.

இறுதியாகப் பாடசாலை ஆசிரியர்கள் தொடர்பான பங்களிப்புகள் நோக்கப்பட்டன. ஆசிரியர் தொடர்பான பங்குபணி கனதியானது என்பது உணரப்பட்டது. அதிலும் வடஇலங்கை ஆசிரியர் பொறுத்து அவர்களுக்கான பங்குபணி மேலும் காத்திரமானது என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டது. ஆயினும் வட புல ஆசிரியர்கள் மனிதநேயவிழுமியப் பேணலின் அவசியத்தை மாணவசமுதாயத்தினர் சரிவர புரிந்து கொள்ளுமளவிற்கான வழிகாட்டல்களை செய்வதிலுள்ள போதாமைகள் பற்றியும் இங்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. வடஇலங்கை ஆசிரியர் பொறுத்து அவர்களிடையேயான பின்னடைவுகள், அவர்களால் எதிர் நோக்கப்படும் பிரச்சினைகள் என்ற இரு வேறு நிலைமைகளையும் நாம்

கருத்தில் கொள்ள வேண்டும். ஆனாலும் அவற்றைப் புறம் தள்ளி 'ஆசிரியத்தொழிலின் புனிதத்துவம்' அவர்களால் உணரப்படவேண்டியது அவசியமாக உள்ளது. ஏனெனில் ஏற்கெனவே சுட்டப்பட்டது போன்று நாளைய உலகம் இன்றைய பிள்ளைகளால்தான் வடிவமைக்கப்படுகின்றது. இன்றைய மாணவர்களை நாளைய உலகத்தின் நல்ல குடிமக்களாக ஆக்க வேண்டிய உன்னதமான இடங்களே பாடசாலைகள். மாணவர்களை வடிவமைக்க வேண்டிய உன்னதமான வழிகாட்டிகளே ஆசிரியர்கள். இளமைப்பருவத்தில் மனிதநேயவிழுமியங்களை அவர்களிடையே வளர்த்தல் காத்திரமானதாகும். அதனால் பாடசாலைக் கல்வியினூடாக இவை வளர்க்கப்படுதல் எளிது.

எனவே ஆசிரியர்கள் பொறுப்புடனும், அர்ப்பணிப்புடனும் செயற்பட வேண்டியது இன்றைய சூழலில் மிக அவசியம். கற்றல்-கற்பித்தல் என்பது வெறுமனே பாடங்களை, பாடப்பொருளை மட்டும் கற்பித்தல் என்பதாகப் பொருள் கொள்ளப்படமுடியாது ஆசிரியர்கள் தமது பண்பட்ட நடத்தைகளினூடாக, பொருத்தமான அனுபவங்களை வழங்குவதனூடாக மாணவர் மனிதநேயவிழுமியப்பேணலை கற்றுக் கொள்ளச் செய்யவேண்டும். ஒரு மனிதனால் தான் மற்றொரு மனிதனை உருவாக்க முடியும்.

வட இலங்கையின் பாடசாலைச் செயற்பாடுகளை நோக்குகின்ற போது ஆசிரியர்கள் நாட்டின் பொதுப் பரீட்சைகள் நோக்கிய கற்றல்-கற்பித்தலை மேற்கொள்பவர்களாகவே இருக்கின்றார்கள். தவிர்க்க முடியா தவாறு பொதுப் பரீட்சைகளுக்கு (5 ஆம் தர புலமைப்பரிசில், க.பொ.த சாதாரணதரம், உயர்தரம்) மாணவர்களைத் தயார்செய்கின்ற செயற் பாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டியவர்களாகவே உள்ளனர். ஏனெனில் பரீட்சை முடிவுகள் தான் இன்று பாடசாலையின் தரத்தைக் தீர்மானிக்கும் முக்கிய காரணியாக இருப்பதை அறியமுடிகின்றது. அதனால் பாடங்களைத் தயார் செய்தல்,

குறிப்பெடுத்தல், மனனம் செய்தல், மாதிரி வினாத்தாள் தயாரித்தல், பரீட்சைகளுக்கு மாணவர்களைத் தயார்செய்தல் போன்ற விடயங்கள் இன்று அதிக கவன ஈர்ப்புக்கு உட்படுகின்றன.

ஆயின் இங்கு ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இலங்கை முழுவதும் பரீட்சைமையக் கல்வி என இருந்தாலும் பௌத்த சிங்கள மாணவர்கள் மத்தியிலே மனிதநேயப் பண்பு குறிப்பிடத் தக்களவிற்கு பேணப்படுகின்றது என நினைக்கத் தோன்றுகின்றது. முழுமையாக என்று கூறமுடியாதுவிட்டாலும் பெற்றோரைக் கனம்பண்ணுதல், பெரியவர்களை மதித்தல், ஆசிரியர் மீதான மரியாதை போன்ற நன்நடத்தைகளை அவர்களிடையே காணமுடிகின்றது.

மனிதன் ஒரு சமூகவிலங்கு. விலங்கு மனத்தின் ஆதிக்கத்தை மனிதனிடம் காணலாம். அதன் ஆதிக்கத்திலிருந்து மனிதமனத்தினை விடுவிப்பதற்கு உதவுவனவே மனிதநேயவிழுமியங்களாகும். விலங்கியல் இயல்பு ஊக்கத்தை மாற்றியமைத்து மனிதநேயவிழுமியங்களை மாணவர்கள்பால் உருவாக்குவதற்கு உதவுவதே பாடசாலைக் கல்வியாகும். இன்று பொதுவாகவே 'மனிதம்' மறுக்கப்பட்டு மனிதனால் உருவாக்கப்படும் பொருட்கள் முக்கியத்துவம் பெற்றுவரும் நிலை உருவாகத் தொடங்கியுள்ளது. அதனால் பாதிக்கப்படப் போவது நாமே. அதனால் மனிதம்சார் பண்புகளை மாணவர்களிடம் உருவாக்க வேண்டிய அடிப்படை கடமையை கல்வி ஆற்றவேண்டியதாக இருக்கின்றது.

யுத்தத்திற்குப் பின்னரான இன்றைய சமாதான காலத்தில் வட இலங்கை தொடர்ந்தும் பல்வேறு பிரச்சினைகளுக்கும், பின்னடைவு களுக்கும் உட்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதிலும் விசேடமாக இளைய சமுதாயமான மாணவர் சமுதாயம் தெரிந்தும் தெரியாமல் பின்நோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது. காலனித்துவம் நீக்கப்பட்டு நவகாலனித்துவம் தன் மறைமுக தாக்கங்களுக்குள் நாடுகளைக் கொண்டு சென்றுள்ளது போல வடஇலங்கையில் 30 வருடகால யுத்தம் முடிந்தும் யுத்தத்திற்குப்

பின்னரான தாக்கங்கள் தொடர்ந்த வண்ணமேயிருக்கின்றன. அதனால் இத்தகைய புதிய எதிர்மறைப் போக்குகளுக்கு, சவால்களுக்கு முகம் கொடுத்து மாணவர்களை வளமாக்க வேண்டிய பாரிய பணி தம் முன்னே இருக்கின்றது என்பதனை ஆசிரியர் ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்படவேண்டிய நிலையிலேயே வடபகுதி உள்ளது. வடபகுதி மாணவர் சமூகத்தை மனிதவளமாக்க வேண்டிய அக்கறையும் பொறுப்பும் வடபகுதி ஆசிரியர்களிடையே மிகுந்து காணப்படும் நிலையுள்ளது. அவர்கள் தம் பங்களிப்பின் முக்கியத்துவம் உணர்ந்து அர்ப்பணிப்புடன் செயற்படுமிடத்தேதான் வடஇலங்கை மாணவர்கள் வளமாக்கப்பட முடியும்.

**"நற்குணம் சேரா அறிவும், மனிதப் பண்பில்லா அறிவியலும் மகா பாவங்கள்"**

(காந்திஜி)

**உசாத்துணை நூல்கள்**


Allport, G.W. (1961). **Pattern and Growth in Personality**. New York: Holt Rinehart and Winston.

Chandrakumar,G.(2013). **A Study of Value Perception and Leadership Behaviour of Teachers.** Tiruchi.

Chitakka, M.G. (2003). **Education and Human Values**. New Delhi: A.P.H. Publishing Corporation.

Ginige, I.L. (2008). **The Vision of the New Curriculum and The Expected Paradigm Shift in School Education**. Padukkai: Centre for Education Professional Competency Development.

Gose, D.N. (2005). **A Text Book of Value Education**. New Delhi: Dominant Publishers and Distributors.

Krishnamoorty, J. (1973). **Education and the Significance of Life**. New Delhi: B.I Publications.

Lal Perera, Swarna Wijetunge and Balasooriya, A.S. (2000). **Education Conflict and Social Cohesion**. International Bureau of Education.

Mohit Chakrabarthi. (2005). **Value Education Changing Perspectives**. New Delhi: Kanishka Publishers and Distributors.

**Northern Province Education Sector Vital Statistics**, (January-February 2015). Northern Province: Provincial Department of Education.

Pavitra, S. (2006). **Education and the Aims of Human Life.** Pondichery: Sri Aurobindo Ashram Publication.

Provincial Department of Education. (2013). **Northern Statistical Year Book**. Northern Province.

Research and Development Branch, Ministry of Education. (January 2015). **Education Perspectives** Vol.4.No.1, Srilanka.

Singh, S.N. (1969). **The Educational Philosophy of Bertrand Russel**. Banaras: Banaras Hindu University.

**The Hindu**, 25.05.1997, 02.03.2001

Unnithan, T.K.N. (1988). **Human Values Through Education**, Ahmedabad: Gujarat Vidyapith.

இலங்கை தேசியகல்வி ஆணைக்குழு அறிக்கை. (1993). இறுதி அறிக்கை

இலங்கை தேசிய கல்வி ஆணைக்குழு. (2003). **இலங்கையின் பொதுக்கல்வி பற்றிய தேசிய கொள்கைச் சட்டகமொன்றுக்கான ஆலோசனைகள்.** இலங்கை

இலங்கை ஜேர்மன் அபிவிருத்தி ஒத்தழைப்பகம், கல்வியமைச்சு. (2005). **சிறுவர் உளநலம்**. மகரகம : தேசிய கல்வி நிறுவகம்.

உதயமூர்த்தி, எம்.எஸ். (2000). **எண்ணங்கள்**, சென்னை: வானதி பதிப்பகம்.

சிவமோகன் & தயாசோமசுந்தரம். (2005). "அனர்த்தங்கள்" **சிறுவர் உளநலம்.** இலங்கை : தேசிய கல்விநிறுவகம்

சிவாஜினி & உதயகலா. (2005). "பிரச்சினைகள்." **சிறுவர் உளநலம்**. இலங்கை : தேசியகல்வி நிறுவகம்

**தினக்குரல்**, 10.12.2015.

பாலசூரிய, ஏ.எஸ். (1993). **சமாதானக் கல்வி – கற்பித்தற் செயற்பாடுகள்**. இலங்கை: தேசிய கல்வி நிறுவகம்.

பொதுக்கல்விக்கான புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான தேசியக்குழு. *(2009).* **இலங்கையில் பொதுக்கல்விக்கான புதிய கல்விச்சட்டம். கூழமைவு எழுவினாக்கள் மற்றும் முன்மொழிவுகள். இறுதி அறிக்கை.**

நேர்காணல் - பல்வேறு பாடசாலைகளின் சிரேஷ்ட ஆசிரியர்கள்

பேராசிரியர் சூசைஆனந்தன். புவியியல்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

ஜெயசேகரம், இ. யாழ்ப்பாண வர்த்தக சங்கத் தலைவர்,யாழ்ப்பாணம்.

[illegible]

[illegible]

[illegible] Education [illegible] Perspective, Vol. [illegible] No. 1 [illegible]

[illegible] The Educational Philosophy of [illegible]

[illegible]

[illegible] Human Values [illegible] Education [illegible]

[illegible]



கலாநிதி திருமதி அனுஷ்யா சத்தியசீலன் அவர்கள் திருகோணமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது ஆரம்பக் கல்வியை திருகோணமலை சென்ற். மேரிஸ் கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியை யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் பெற்றுக்கொண்டவர். 1976 – 1980 காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் வரலாற்றில் சிறப்பு கலைமாணிப் பட்டப்படிப்பினை முடித்து சிறப்புப் பட்டதாரியானார். ஒரு வருடகாலம் (1980-1981) வரலாற்றுத்துறையில் தற்காலிக விரிவுரையாளராகக் கடமையாற்றிய பின்னர் தண்ணீரூற்று முஸ்லிம் மகாவித்தியாலயத்திலும், வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் ஆசிரியராகக் கடமையாற்றினார், 1996இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியல் துறையில் நிரந்தர விரிவுரையாளராக இணைந்து கொண்டார்.

தனது பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்வியியலில் முதுதத்துவமாணிப் பட்டங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே பெற்றுக்கொண்டார். பின்னர் இந்தியாவில் காரைக்குடியிலுள்ள அழகப்பா பல்கலைக்கழகத்தின் கல்வியியல் பீடத்தில் கல்வியியலில் கலாநிதிப் பட்டத்தினை (2005) நிறைவுசெய்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின்கல்விடிப்ளோமா, கல்விமுதுமாணி, முதுகலைமாணி (குடித்தொகைக்கல்வி) போன்ற கற்கை நெறிகளுக்கு விரிவுரையாளராகக் கடமையாற்றும் இவர் முதுதத்துவமாணி, கலாநிதிப்பட்ட ஆய்வுகளின் மேற்பார்வையாளராகவும் கடமையாற்றுகின்றார். அதுமட்டுமன்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மனைப்பொருளியல் அலகின் இணைப்பாளராகவும், பட்டப்பின் கல்விடிப்ளோமா இணைப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். அத்துடன் இலங்கை திறந்த பல்கலைக்கழகம் யாழ்ப்பாணம், இலங்கை தேசிய கல்வி நிறுவகம், குன்றக்குடி அடிகளார் கல்வி ஆய்வுமையம் தமிழ்நாடு போன்ற கல்வி நிறுவனங்களில் வளவாளராகப் பங்கு பற்றிய அனுபவங்களையும் கொண்டவர். மேலும் இலங்கை, தமிழ்நாடு ஆசிரியர்களுக்கான வலுவூட்டற் செயலமர்வுகளிலும் வளவாளராகக் கலந்து கொண்டுள்ளார். சென்னைப் பல்கலைக்கழகம், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகம், கொடைக்கானல் அன்னைதெரேஸா பல்கலைக்கழகம், கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம், சேலம் பெரியார் பல்கலைக்கழகம், காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகம், ஆச்சாரியா நாகார்ஜுனா பல்கலைக்கழகம் போன்றனவற்றில் கல்வியியல் கலாநிதி பட்ட ஆய்வுகளின் மதிப்பீட்டாளராகவும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

சமகாலகல்விப்பிரச்சினை, ஒப்பீட்டுக்கல்வி, இலங்கைக்கல்வி வரலாறு, மூன்றாம் நிலைக் கல்வி, போன்ற கல்வியியல் பாட நெறிகளில் மிக அக்கறை கொண்ட இவர் ஐம்பதுக்கு மேற்பட்ட ஆய்வுக்கட்டுரைகளை இவை தொடர்பாக எழுதியுள்ளதுடன், இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், கனடா போன்ற நாடுகளின் பல்வேறு ஆய்வுக் கருத்தரங்குகளிலும் வளவாளராகக் கலந்து கொண்டுள்ளார்.

தற்சமயம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கல்வியியற்றுறையில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம்1 இல் கடமையாற்றுவதுடன் 2011 ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை கல்வியியற்றுறையின் தலைவராகவும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

Viru Inuvil